Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை (04.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 035

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)



பதவி நீக்க முடியாது (06)



தங்கம் வென்ற சிங்கங்கள் (09)



சாதனை சகோதரிகள் (10)




ஆடைகளை நீக்கி காட்ட... (12)



மீண்டும் கொலை வெறி... (17)

# சர்வசன வாக்கெடுப்பு மூலம் 'திவிநெகும' சட்டமாக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

சர்வசன வாக்கெடுப்பு மூலம் திவிநெகும திட்டத்தை அமுல்படுத்தலாமென உயர்நீதிமன்றம் அறிவுறுத்தல் விடுக்குமாக இருந்தால் சர்வசன வாக்கெடுப்பு மூலமாகவேனும் திவிநெகும சட்டமூலம் அமுல்படுத்தப்படுமென அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாண சபை இல்லாத நிலையில் வடமாகாண ஆளுநர் இந்த சட்டமூலத்துக்கு ஒப்புதலளிக்க முடியுமா என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு இப்போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் நாடாளுமன்றத்தில் நவம்பர் 6 ஆம் திகதி அறிவிக்கப்படும்.

சில சமயம் இந்த சட்டமூலத்துக்கான மக்களின் ஒப்புதலை ஒரு சர்வசன வாக்கெடுப்பு மூலம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கைபேசி உரையாடல் சிற்றூழியருக்கு கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையின் போது சிற்றூழியர்கள் கைத்தொலைபேசியில் உரையாடுவதற்கு கட்டுப்பாட்டினை வைத்தியசாலை நிர்வாகம் அமுல்படுத்தியுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்த சிற்றூழியர்கள் விடுதிகளுக்கு நோயாளர்களை சக்கரநாற்காலி மற்றும் தரை வண்டிலில் கொண்டு செல்லும்போது கையடக்கத் தொலைபேசியில் உரையாடுவதாகவும், இதனால் நோயாளர்கள் அசௌகரியங்களுக்குள்ளாவதாகவும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்தே இந்தக் கட்டுப்பாட்டை வைத்தியசாலை நிர்வாகம்

(19) ஆம் பக்கம் பார்க்க

### தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண

## சிங்கள மக்களின் மனங்களை வெற்றிகொள்வது அவசியம்


(பளை)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் சுமுகமாகவும் ஐக்கியமாகவும் தீர்த்துகொள்வதற்கான சூழல் உருவாகியுள்ள நிலையில் நாம் பெரும்பான்மை சிங்கள மக்களின் மனங்களை வெல்லும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித். தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளாா.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சோரன்பற்று கிராமத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடத்தினை நேற்றைய தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனங்களுக்கிடையே நல்லிணக்கம் என்பது மிக அவசியமானது அவ்வாறே. ஐக்கியமும், கருத்துப் பரிமாற்றமும் ஏற்படுவதன் ஊடாக நீண்ட காலமாக இந்த நாட்டில் இரு இனங்களுகிடையே நிலவிவருகின்ற பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ள முடியும் அந்த வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகின்ற

(19) ஆம் பக்கம் பார்க்க



முல்லைத்தீவு ஆனந்தபுரத்தில் குண்டு வெடித்து உயிரிழந்த சிறுமி யோ.நிஷாந்தினியின் குடும்பத்திற்கு மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எச்.குணரத்ன வீரக்கோன் உயிரிழப்பு பணமாக ஒரு இலட்சம் ரூபா காசோலையை அவரது குடும்பத்திற்கு கையளிப்புச் செய்வதைக் காணலாம். (04)

## இறுதிக்கட்டப் போரில் உயிரிழந்த 40 ஆயிரம் பேருக்கும் நடந்தது என்ன?

### விளக்கக் கோருகிறார் தருஸ்மன்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 40 ஆயிரம் பேருக்கும் என்ன நடந்தது என விளக்கமளிக்கப்பட வேண்டுமென இலங்கை தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுவின் தலைவரும் இந்தோனேஷியாவின் முன்னாள் சட்டமா அதிபருமான மர்சுகி தருஸ்மன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொறுப்புக்கூறுதல் என்பதன் அர்த்தம் இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் மரணங்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## செல்வம் எம்.பி.யின் மைத்துனர் கொழும்பில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் காணாமற்போன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் நானுஓயாவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தங்க ஆபரண வர்த்தகரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் (வயது - 53) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்தமாதம் 30 ஆம் திகதி சுமார் 30 இலட்சம் ரூபா பணத்துடன் இவர் கொழும்பு செட்டியார் தெருப் பகுதியில் காணாமற்போயிருந்தார்.



நானுஓயாப் பகுதியில் இவரது சடலத்தை கடந்த வியாழக்கிழமை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

எனினும் நேற்றைய தினமே அது காணாமற் போனவருடையது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தச் சடலம் காணாமற்போன, தனது சகோதரியின் கணவரான சின்னத்துரை இந்திரேஸ்வரனுடையது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அடையாளம் காட்டியுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஈழத்தமிழருக்கான அரசியல்தீர்வு; வாக்கெடுப்பிற்கு இந்திய அழுத்தம்

### வேண்டும் என்கிறார் கருணாநிதி

(சென்னை)

ஈழத் தமிழரின் அரசியல் தீர்வு என்ன என்பது தொடர்பாக பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, டெசோ மாநாட்டு தீர்மானங்களையும், தி.மு.க.வின் கருத்துக்களும் அடங்கிய விரிவான மனுவை ஐ.நா. மன்றத்தில் மு.க. ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் நேரில் வழங்கினார்கள்.

அதில் டெசோ இயக்கத்தின் சார்பில் தி.மு.க. தலைவர் என்ற முறையில் நான் கையெழுத்திட்டுள்ளேன். இலங்கையில் ஏற்கனவே நடைபெற்ற இப்போது நடந்து கொண்டு இருக்கிற நிலைவரங்கள் பற்றி ஐ.நா. துணைப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சிரமங்களை எதிர்கொள்ளும் மீள்குடியேற்றப்பட்ட மக்கள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த நிலையில் மீளவும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடபகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஐ.ஆர்.ஐ.என் ஊடகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த வடக்கு மக்களில் பலர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# வேலணை பிரதேச சபை

## 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத்தரிப்பிடங்கள், சிற்றூண்டிச் சாலை என்பனவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 05.11.2012 தொடக்கம் 14.11.2012 வரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 16.11.2012 மதியம் 12.00 மணி வரை.

கேள்வி திறக்கும் திகதி 16.11.2012 பிற்பகல் 12.30 மணி.

| இல | சந்தை பெயர் | மீளளிக்கப் படாதகேள் விப் படிவக் கட்டணம் (VAT) தவிர்த்து | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் (VAT) தவிர்த்து | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT) தவிர்த்து |
|---|---|---|---|---|
| 01 | துறையூர் மீன் சந்தை - வேலணை | 1000.00 | 10000.00 | 149,600.00 |
| 02 | செட்டிபுலம் மீன் சந்தை - வேலணை | 500.00 | 5000.00 | 40,150.00 |
| 03 | சரவணை மீன் சந்தை - வேலணை | 500.00 | 5000.00 | 13,200.00 |
| 04 | அம்பிகை நகர் மீன் சந்தை - வேலணை | 500.00 | 5000.00 | 33,000.00 |
| 05 | அல்லைப்பிட்டி மீன் சந்தை - அல்லைப்பிட்டி | 500.00 | 5000.00 | 44,000.00 |
| 06 | மடத்துவெளி மீன் சந்தை - புங்குடுதீவு | 1000.00 | 10000.00 | 177 [illegible].00 |
| 07 | நயினாதீவு வடக்கு மீன் சந்தை - நயினாதீவு | 500.00 | 5000.00 | 2[illegible]00 |
| 08 | நயினாதீவு தெற்கு மீன் சந்தை - நயினாதீவு | 500.00 | 5000.00 | 27,[illegible].00 |
| 09 | புங்குடுதீவு மாட்டிறச்சிக் கடை - புங்குடுதீவு | 1000.00 | 10000.00 | 429,110.00 |
| 11 | சாட்டி சிற்றூண்டிச்சாலை - வேலணை | 500.00 | 5000.00 | 36,000.00 |
| 12 | சாட்டி வாகன நிறுத்துமிடம் - வேலணை | 1000.00 | 10000.00 | 150,000.00 |

■ கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தவிசாளர், வேலணைப் பிரதேச சபை, வேலணை.' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

■ கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும், அதன் நிழல்ற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

■ உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

■ ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பும் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

■ கேளிவிப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்கு 12% (VAT) பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்.

■ கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

■ தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விக்கார்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும், ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் 05.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.

■ கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

■ புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரப்படும் மீன்கள் சந்தை வரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.

■ சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.

■ வாகனத்தரிப்பிடங்களில் வேலணைப் பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச்சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்து சபை, அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத்தரிப்பிட கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

(துவிச்சக்கர வண்டி 5/= மோட்டார் சைக்கிள் 10/= கார், ஆட்டோ, லான்மாஸ்ரர் 30/= வான் 50/= லொறி, பஸ் 100/=)

■ கேள்வி சம்மந்தமான மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவல்க நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை
வேலணை.
02.11.2012

(C/2088)

சி.சிவராசா
தவிசாளர்
வேலணைப் பிரதேச சபை

# உறவினர் வீடுகளில் தங்கியுள்ளோரின் மீள்குடியேற்றம் எப்போது?

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபுலவு சீனியா மோட்டை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மக்கள் தம்மைச் சொந்த இடத்தில் மீள் குடியமர்த்துவதற்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

இக்கிராம அலுவலர் பிரிவில் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து 188 குடும்பங்கள் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள மேற்படி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 116 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்தே குறித்த மக்கள் தாம் எப்போது சொந்த இடத்தில் மீள்குடியமர்வது என ஆதங்கத்துடன் கேட்டுக் கொள்கின்றனர்.

முகாம்களில் தங்கியிருந்த மக்கள் மீள்குடியமர்த்தப் பட்டதைப் போல் எங்களையும் சொந்த இடத்தில் மீள்குடியமர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு குளங்கள் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஏழு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் சடவக்குளம், கூழாமுறிப்பு, தண்டுவான், சின்ன இத்திமடு, அம்பலவானபற்று, கோணமடு, அலை சிந்தியகுளம், தகிய ஏழு சிறிய குளங்களே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. (69)

# யாழில் 855 வீடுகள் வெள்ளத்தால் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் போது 4756 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரின் திட்டங்கள் நடவடிக்கைகள் சபையின் முன்வைக்கப்பட்ட போதே தற்போதைய கால நிலை பற்றி தெரிவிக்கப்பட்டது.

அனர்த்தத்தில் 4756 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதுடன் 21 வீடுகள் முற்றாக பாதிக்கப்பட்டதுடன், 855 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், ஒருவர் மரணமாகியுமுள்ளார் அத்துடன் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 13,000 மாணவர்களுக்கு ஊடாக அனர்த்த முகாமைத்துவத்தின் செயற்திட்டங்கள் மற்றும் தரவுகளை பரிமாறுதல், அவசர நிலைமைகளை எவ்வாறு தகுந்த இடங்களுக்கு வழங்குவது போன்ற செயற்திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இம் மு[illegible] ஏற்பட்ட காற்று, வெள் ளத்[illegible] போது அதிக தக வல்கள் கிடைத்ததாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ)

# இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவலர் வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவலர் வீதிப்பகுதியின் கைலாச பிள்ளையார் கோவில் சந்தியில் அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைஞனை மோதியதால் அரியாலையைச் சேர்ந்த கந்தன் சுரேஸ்குமார் (வயது - 24) என்ற இளைஞன் படுகாயமடைந்து தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். (69)

# மாணவர்களுக்கு பாராட்டு விழா

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாடடில் இவ்வருடம் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் சித்தியடைந்த ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கலைவிழா

(துன்னாலை)

துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தினர் நடத்தும் கலைவிழா இன்று மாலை 5.00 மணிக்கு மேற்படி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.பட்டி மன்றக்குழுவினர் வழங்கும் இன்றைய பெண்களின் சிக்கல்களுக்கு காரணம் ஆண்களா? பெண்களா? என்னும் பொருளில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. (10)

# இலங்கை வங்கிக்கு 15 ஆயிரம் கோடி வருமானம்

## இலங்கை வங்கி பிரதி பொதுமுகாமையாளர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி கடந்த வருடத்தில் 15 ஆயிரம் கோடி ரூபா பணத்தினை இலாபமாகப் பெற்றுளளது. இதில் வடக்கு மாகாணத்திலிருந்து எமக்கு அதிகமான இலாபம் கிடைத்துள்ளது என இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் முதியான்சே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர தொழில் முயற்சி வங்கியியல் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமக்கு கிடைக்கின்ற இலாபம் அனைத்தும் அரசாங்கத்திற்கே வழங்கப்படுகிறது. அந்தப் பணத்தின் மூலம் அரசு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கிறது.

அரச வங்கி என்ற ரீதியில் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய கடமைப்பாடு எமக்கு உள்ளது. எனவே இப் பகுதிக்கு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப் படுத்தி வருகின்றோம். அதன் ஒரு மைல் கல்லாகவே இந்த நிலையம் இங்கு திறந்து வைக்கப்படுகிறது. இதன் மூலம் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் குறைந்த வட்டியில் கடன்களைப் பெற்றுத் தொழிலினை ஆரம்பித்து அதன் மூலம் இப்பிரதேசத்தை அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும்.

பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவே எமது வங்கி ஒவ்வொரு பிர தேசங்களிலும் கிளைகளை அமைத்து சேவை வழங்கி வருகின்றது. எனவே இந்தச் சேவைகளை செவ்வனே பெற்று அதன் மூலமாக சிறந்த பயனை அடையவேண்டும் அதுவே எமது விருப்பமாகும் என்றார்.

இந்நிகழ்வில் வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் வேல்நம்பி, வடபிராந்திய இலங்கை வங்கி பொது முகாமையாளர் கே.இ.டி சுமணசிறி உளளிட்ட பலர் கலந்து கொண்டனர். (54)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் (வகை 1c பாடசாலை) யாழ் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை (வகை 1c பாடசாலை) ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கு வெற்றிடமாகவுள்ளது.

இதற்கு வகை 1c பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இத்தரத்தைச்சேர்ந்த விண்ணப்பங்களிலிருந்து தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-11 கவனத்தில் கொள்ளப்படும்.தற்போது அதிபர் சேவை நியமனம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். அத்துடன் இப்பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலத்தில் பெற்று பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.


# விலை அதிகரிப்பு

(வரணி)

கொடிகாமம் பொதுச் சந்தையில் தற்போது மரக்கறிவகைகளின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

கடந்த ஞயிற்றுக்கிழமை 1 கிலோ கத்தரி 120 ரூபாவாகவும் பயிற்றங்காய் 140 ரூபாவாகவும் ஏனைய மரக்கறிவகைகளும் அதிக விலையில் காணப்பட்டது. தற்போது கௌரிவிரதம் அடுத்து கந்த சஷ்டி போன்ற விரத நாட்கள் ஆரம்பமாவதால் மேலும் விலை உயாவு அடையுமென மரக்கறி வியாபாரிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# கனகாம்பிகைக்குளம் வாய்க்கால் திறப்பு



(கிளிநொச்சி)

2012/2013 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்கான நீர் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரேதேசத்திலுள்ள கனக கைக்குளத்திலிருந்து வைட தியாக நீர்ப்பாசன வாய்க்கால்களுக்கு நேற்று முன்தினம் திறந்துவிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து இந்நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்கள்.

கனகாம்பிகைக்குளம் 1961 1963 ஆம் ஆண்டு காலப்பகுதியல் 105 விவசாயக் குடும்பங்களின் 260 ஏக்கர் நெற்செய்கைக்காக உருவாக்கப்பட்டது. நீண்ட காலமாக இக் குளத்தில் எந்த விதமான புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்படாமையினால் இக்குளத்தின் ஆரம்ப கொள்ளளவிலும் குறைவான நீரையே சேமிக்க முடிந்தது. இப்பிரதேசத்தில் கடந்த காலத்தில் காணப்பட்ட யுத்த சூழ்நிலைகளினால் குளக்கட்டு சேதமடைந்து மோசமான நிலையில் காணப்பட்டது.

2009 ஆம் ஆண்டு மே மாதம்போர் முடிவடைந்து சுமூக நிலை ஏற்பட்டபின் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக குளங்களின் புனரமைப்பு உட்பட பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இக்குளத்தினை புனரமைக்க, வட மாகாண ஆளுநரின் வேண்டுகோளுக்கமைய 17 மில்லியன் ரூபா என்றிப் திட்டத்தினூடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வட மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இக்குளத்தின் புனரமைப்பு பணிகள் 2011 ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவு பெற்றது. தற்சமயம் பருவமழை தொடங்கியுள்ளதால் குளத்தின் நீர்மட்டம் நிரம்பியுள்ளது.

இந்நிகழ்வில் வட மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் எந்திரி.கே.எஸ்.சிவபாதம், பிரதப் பணிப்பாளர் எந்திரி.என்.சுதாகரன், விவசாய அமைச்சு, நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகள், விவசாய பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# கொடிகாமம் - பருத்திறை வீதி; நாய்களால் தொல்லை

(கிளிநொச்சி)

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களால் வீதியூடாகப் பயணங்களை மேற்கொள்வோர் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியில் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாகப் படுத்துறங்கும் நாய்கள் வீதியால் பயணிப்போரைத் துரத்திச் செல்வதையும் குறிப்பாக இரவுநேரங்களில் வாகனங்களில் இந்த நாய்கள் அகப்பட்டு இறப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் இக்கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# அபிவிருத்திக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதில் வணிகத்துறை அமைச்சரும் வன்னி மாவட் அபிவிருத்திக் குழுத் தலைவருமான அமைச்சர் ரிஷாட் பதியூதீன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், பிரதேச செயலர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ள வுள்ளனர்.

இக்கூட்டத்தின் பின்னர் முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மெகாகோப் சிற்றி, முல்லைப் பொதுநூலகம், முல்லைத்தீவு பொதுநோக்கு மண்டபம் என்பன அமைச்சரால் திறந்து வைக்கப்படவுள்ளது. (04)

# சிறுவர்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தினால் யாழில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு, கட்டுரை

**ஆரம்பப்பிரிவு**

செ.தக்சனா (பருத்தித்துறை), அ.தனுசிகா (மருதங்கேணி), றா.சரண்யா (கரவெட்டி).

**கீழ்ப்பிரிவு**

ஞா.பிறின்சிகா (மருதங்கேணி), வ.ஜெயானி (கரவெட்டி), த.திவ்யா (சண்டிலிப்பாய்).

**மத்தியபிரிவு**

அ.நிரோஜன் (வேலணை), சுபீட்சனா அன்ரன்ஜூட் (சண்டிலிப்பாய்), செ.விஸ்னுகா (யாழ்ப்பாணம்).

**மேற்பிரிவு**

இ.அபிசா (யாழ்ப்பாணம்), ஜெ.ஜெனுசன் (தெல்லிப்பளை), சூ.மேகலா (சங்கானை).

(தொடரும்...)

# மிதிவெடிக் கல்வி நூல் விநியோகம்



(மன்னார்)

UNICEF இன் நிதி அனுசரணையுடன் கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து மிதி வெடி அபாயக் கல்வி பாதுகாப்பிற்காக உருவாக்கிய பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல் விநியோகித்தல் நிகழ்வு மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் 16.10.2012 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது. கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் UNICEF நிறுவன அதிகாரிகளும் இந் நிகழ்வில் கலந்து பாடசாலைகளுக்கான இப்பாடநூல்களை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தனர்.

இப்பாடநூல் ஆனது தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புக்களுக்கு வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் பாடத்தில் பாதுகாப்புத் தேர்ச்சியில் இப்பாடப்பரப்பு உள்ளடக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

உழைப்பு எந்த மனிதனையும் ஏமாற்றுவதில்லை. மனிதன்தான் உழைப்பை ஏமாற்றுகிறான் . - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## விளையாட்டும் கூட்டமைப்பின் அரசியலும்!

கொலையும் ஒரு கலை என்று மந்திரிகுமாரியில் வசனம் எழுதினார் கருணாநிதி. அதையொட்டி அரசியலும் ஒரு விளையாட்டு என்று சொல்லத் தோன்றுகிறது. அதற்காக அரசியலை விளையாட்டாக எடுக்க முயல்வதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. விளையாட்டில் எப்போதெல்லாம் தோல்வியுண்டாகிறது என்று பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ்மக்களை எப்படியெல்லாம் தோற்க வைத்துக் கொண்டிருக்கிறது என்கிற விளக்கமும் கிடைக்கிறது.

கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், ஹொக்கி, கூடைப்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் எல்லாம் பலரோடு சேர்ந்து விளையாடுவதால் அணிக்குள் இருப்பவர்களின் கூட்டு முயற்சியே வெற்றியைக் கொண்டுவருகிறது. கூட்டமைப்போ குழுச்சண்டைக்குப் பேர்போனது. தேர்தல் ஒன்றைத் தவிர மக்களுக்குத் தேவையான வேறு எந்த அரசியல் நகர்வுக்காகவும் அவர்களை ஒன்றுபடுத்த முடியாது. அப்படி இருக்கையில் வெற்றி எப்படி வரும்?

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவதற்காகத் தன்னையும் தன் அணியையும் எப்படித் தயார் செய்து கொள்வது என்பதை அணியிலுள்ள ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும். அந்த அணிக்கென ஒரு திட்டம் இருக்க வேண்டும். அதன்மூலம்தான் அந்த அணியை நம்பியிருக்கும் ஆதரவாளர்களுக்கு வெற்றி மகிழ்ச்சியைக் கொடுக்க முடியும். அரசியல் பேச்சுக்களில் வெற்றி பெறுவதற்கும் அதுவே வேண்டும்.

ஆனால் கூட்டமைப்போ தோல்வி காணுவதற்காகவே திட்டமும் தயாரிப்புகளும் இன்றிச் சும்மா ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

பிறந்த குழந்தை உடனே எழுந்து ஓட முடியாது. அது புரண்டு, தவழ்ந்து, எழுந்து, நடந்து அதன் பின்தான் ஓடவேண்டும். எந்த ஒரு விளையாட்டும் அப்படித்தான். பல படிகளைக் கடந்துதான் வெற்றியை எட்ட முடியும். அரசியலுரிமைகளைப் பெறுவதிலும் படிப்படியான அணுகுமுறைகளிலேயே இறுதி வெற்றிக்குச் செல்ல முடியும். அனைத்து அதிகாரங்களையும் ஒரேயடியாகத் தந்தால்தான் அதைப்பற்றிப் பேச வருவோம். இல்லாவிட்டால் சர்வதேசத்திடம் சொல்லிவிட்டுச் சும்மா இருப்போம் என்கிற அரசியல் விளையாட்டு மக்கள் கஷ்டங்களை நீடித்து வைத்திருப்பதற்கான தோல்வியாட்டம் தான்!

விளையாட்டென்றால் ஒவ்வொரு ஆட்டத்தில் இருந்தும் கற்றுக்கொண்டு அதில் பெற்ற அனுபவங்களை அடுத்த ஆட்டத்தில் பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். பழைய ஆட்டத்தையே தொடர்ந்தும் ஆடிக்கொண்டிருப்பது பழைய தோல்விகளையே பெற்றுக்கொண்டிருப்பதாகத்தான் முடியும். பழைய தோல்விகளைச் சுயவிமர்சனம் செய்துகொள்ளாமல், நாம் வெற்றியை நோக்கியே விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்று ஏமாற்றிக் கொண்டிருப்பதுதான் மிக மோசமான முட்டாள்தன விளையாட்டு.

களநிலைக்கும் காலநிலைக்கும் ஏற்ப விளையாட்டின் போக்கை மாற்றிக்கொள்ளாதவர்கள் எப்படி வெற்றியை நோக்கிச் செல்லமுடியும்? அரசியலில் இவர்கள் அறுபதாண்டு காலமாக ஒரே விளையாட்டைத்தானே விளையாடி வருகிறார்கள்! இவ்வளவு அழிவுகளையும் துன்பங்களையும் கொண்டுவந்த வீரவசன விளையாட்டுத்தானே இப்போதும் தொடர்கிறது!

விளையாட்டை வெறும் விளையாட்டாக மட்டும் எடுக்காமல் வாழ்க்கைக்கும் பாடமாக எடுக்க வேண்டும். அரசியலுக்கும் அதையே பாடமாக எடுத்துக்கொண்டால், தொடரோட்டத்தில் வந்துகொண்டிருக்கும் இந்தப் பழைய தலைமைகளின் தோல்வி வரலாற்றுக்கான காரணங்கள் புரிந்துவிடும்.

- ஆசிரியர்

# எரிபொருள் இறக்குமதி உடன்பாடு
# அமெரிக்க தீர்ப்புக்கு எதிர்ப்பு

## — சட்டநடவடிக்கைக்கு முஸ்தீபு —

(கொழும்பு)

இலங்கைக்கான எரிபொருட்கள் இறக்குமதி மற்றும் கையாளுகை தொடர்பான ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பான அமெரிக்க மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்கு எதிராக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சட்ட நடவடிக்கை எடுக்க உத்திதேசித்துள்ளது.

மேற்படி ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பாக, அமெரிக்காவை தளமாகக் கொண்டுள்ள இந்த மத்தியஸ்தர்களால் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, சட்டமா அதிபரின் ஊடாக உரிய சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்படி தகவலை வெளியிட்டார்.

ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பான விசாரணைகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், டொயிஸ் வங்கிக்கு 6 கோடி அமெரிக்க டொலர்களை வழங்க வேண்டும் என்று அமெரிக்க மத்தியஸ்தர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த நடுத்தீர்பாளரின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு 120 நாட்கள் இருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# கொரியாவில் தொழில்வாய்ப்பு கைநழுவிப்போகும் அபாயம்

## மொழி அறிவு இன்மையே காரணம்

(கொழும்பு)

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் 3000 கொரிய தொழில் வாய்ப்புகள் கைநழுவிப்போயுள்ளதாக கொழும்பு சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென் கொரியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 3000 தொழில் வாய்ப்புகள் இவ்வாறு விரயமாகியுள்ளதாக அந்நாட்டுத் தூதுவர் சொய் ஜொக் முன் தெரிவித்துள்ளார்.

தென் கொரியா கோட்டா முறைமையில் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கைக்கே அதிகளவு தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

ஏனைய நாடுகளின் சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கைக்கு கூடுதல் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் இலங்கைக்கு 10,000 தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், மொழி மற்றும் தொழில்நுட்ப அறிவு போன்ற அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் இந்த 10,000 தொழில் வாய்ப்புக்களில் 7,000 மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 3000 தொழில் வாய்ப்பு உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என தூதுவர் ஜொன் முன் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலியா நோக்கி படையெடுக்கும் இலங்கையரைத் தடுக்கும் முயற்சி தோல்வி

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிற்கு அதிக அளவிலான அகதி அந்தஸ்து கோரி சர்வதேச ரீதியாக வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தத் தகவலை அவுஸ்ரேலிய அமைச்சர் கிறிஸ போவன் வெளியிட்டுள்ளார்.

இருப்பினும், அவுஸ்ரேலிய நிர்வாகத்தினால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குடிவரவுக் கொள்கைகள் காரணமாக அகதி அந்தஸ்து கோருபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும், இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியாவிற்கு வரும் அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, ஈராக், ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை கனிசமான அளவு குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முறைமைகள் அமுலுக்கு வந்ததன் பின்னரும் இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை முன்னரை விட அதிகரித்துள்ளதாகவும் அவுஸ்ரேலிய அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையைச் சேர்ந்த 26 பேர் அண்மையில் நாடு கடத்தப்பட்ட நிலையில், ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்த காலப்பகுதியினுள் 116 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எப்படியிருப்பினும், உண்மையான அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு அவுஸ்ரேலியா சாதகமான முறையிலே செயற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 5 உடும்புகள் வைத்திருந்த நால்வர் நீதிமன்றில் ஆஜர்

வவுனியா - கல்மடுப்பிரதேசத்தில் ஐந்து உடும்புகளை வைத்திருந்த நால்வர் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதாக யாழ். ' பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வேட்டையாடுவது, உடும்பு பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதால் இவர்கள் வசமிருந்த இந்த உடும்புகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இந்தச் சம்பவம் கடந்த மாதம் 25ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இதேவேளை கடந்த 31 ஆம் திகதி வவுனியா கனகராயன் குளம் பகுதியில் இடியன் துவக்கு வைத்திருந்த ஒருவர் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# நீதித்துறையைப் பலவீனப்படுத்த அடம்பிடிக்கிறது அரசாங்கம்

## — சாடுகிறார் பொன்சேகா —

(கொழும்பு)

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஷிரானி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கையில் இறங்கியுள்ள அரசாங்கம் நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பை பலவீனப்படுத்த முயல்கிறது என முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சரத் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

தன் மீதான வழக்குகளில் நீதிமன்றங்களிடம் இருந்து தனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றாலும்கூட நாட்டின் நீதிக்கட்டமைப்பை பலவீனப்படுத்துகின்ற முயற்சிகளை தன்னால் அனுமதிக்க முடியாது என்று பொன்சேகா குறிப்பிட்டார்.

ஷிரானிக்கு எதிராக தற்போது அரசாங்கம் எடுத்து வருகின்ற நடவடிக்கை நாட்டில் நீதித்துறையின் சுதந்திரத்தைக் கடுமையாகப் பாதிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஷிரானி பண்டாரநாயக்க சம்பந்தமான பதவி நீக்க கண்டனப் பிரேரணையை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படும் என இலங்கை அரசு வியாழனன்று அறிவித்திருந்தது. இந்தத் தெரிவுக் குழுவின் விசாரணைகள் நடுநிலையாக இருக்காது என்றும் சரத் பொன்சேகா குற்றம்சாட்டினார்.

## அரசியல் தீர்வைத் தவிர்ப்பதற்காக

# தமிழ்க் கூட்டமைப்பு நாடகம் ஆடுகின்றது

**- சங்கர சிவன்**

> **வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை, சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் கூட்டமைப்புத் தலைவர்கள் கைநழுவவிடும் இன்னொரு சந்தர்ப்பமாகிவிடுமா என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழுகின்றது. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை இத்தலைவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். அது அடிமைச் சாசனம் என்று பிரசாரம் செய்தார்கள். அதே தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் தீர்வொன்றை முன்வைக்குமாறு இப்போது அரசாங்கத்தைக் கேட்கின்றார்கள். அன்று அடிமைச் சாசனம் என்று விமர்சித்தது ஏன் என்ற விளக்கத்தை இன்று வரை கூறவில்லை. இன்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பவர்கள் கொஞ்சக் காலத்துக்குப் பின் தாங்கள் செய்தது தவறு என்று சொல்லலாம்.**

இனப்பிரச்சினையின் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்ற மறுப்பதற்கான விளக்கத்தைக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அண்மையில் அளித்திருக்கின்றார். அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பு நடத்திய பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட முடிவுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்பதும் அந்தப் பேச்சுவார்த்தையின்போது கூட்டமைப்பு முன்மொழிந்த விடயங்களைத் தெரிவுக் குழுவுக்கான அரசாங்க ஆவணங்களில் உள்ளடக்கவில்லை என்பதும் சுமந்திரன் கூறிய பிரதான காரணங்கள். இக்காரணங்களுக்காகக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்பது வேடிக்கையான தர்க்கம். விதண்டாவாத சட்டத்தரணிகள் இப்படியான தர்க்கங்களை முன்வைப்பது வழக்கம்.



தமிழ் மக்கள் தங்களை எதற்காகத் தெரிவு செய்தார்கள் என்பதையிட்டுக் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தடுமாற்றம் இருப்பதுபோல் தெரிகின்றது. அரசாங்கத்தின் எல்லாச் செயல்களிலும் குறைகண்டு பிடித்து எதிர்ப்பு அரசியல் செய்வதற்காகத் தெரிவு செய்தார்களா? அல்லது கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடுவதற்குத் தெரிவு செய்தார்களா? கூட்டமைப்புத் தலைவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும்போது, எதிர்ப்பு அரசியலுக்காகவே தங்களைத் தமிழ் மக்கள் தெரிவு செய்தார்கள் என்று நினைப்பது போல் தெரிகின்றது. 'கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு இவர்கள் ஒரு போதும் விரும்புவதில்லை. வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை, சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் கூட்டமைப்புத் தலைவர்கள் கைநழுவவிடும் இன்னொரு சந்தர்ப்பமாகிவிடுமா என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழுகின்றது.

சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை இத்தலைவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். அது அடிமைச் சாசனம் என்று பிரசாரம் செய்தார்கள். அதே தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் தீர்வொன்றை முன்வைக்குமாறு இப்போது அரசாங்கத்தைக் கேட்கின்றார்கள். அன்று அடிமைச் சாசனம் என்று விமர்சித்தது ஏன் என்ற விளக்கத்தை இன்று வரை கூறவில்லை. இன்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பவர்கள் கொஞ்சக் காலத்துக்குப் பின் தாங்கள் செய்தது தவறு என்று சொல்லலாம்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் இனப்பிரச்சினையின் தீர்வை அடைவதற்குக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் தவறவிடக்கூடாது. எல்லாச் சந்தர்ப்பங்களையும் சரியாகப் பயன்படுத்தவேண்டும். அதன் மூலம் பலன் கிடைக்காது போனாலும் இழப்பதற்கு எதுவுமில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினையின் தீர்வுக்காகக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம். கூட்டமைப்பு அதில் பங்குபற்றித் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்கலாம். அவ்வாலோசனைகளை மற்றைய கட்சிகள் ஏற்றுக்கொள்ளாமல் விட்டாலும்கூட கூட்டமைப்போ தமிழ் மக்களோ இழக்கப்போவது எதுவுமில்லை. பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட முடிவுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்பதையோ தெரிவித்த விடயங்களைத் தெரிவுக் குழுவுக்கான ஆவணங்களில் உள்ளடக்கவில்லை என்பதையோ காரணங்காட்டித் தெரிவுக் குழுவிலிருந்து ஒதுங்குவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இவர்களுடைய கூற்றின்படி, அரசாங்கம் தவறு செய்திருக்கின்றது என வைத்துக்கொள்வோம். அரசாங்கத்தின் தவறுக்காகத் தமிழ் மக்களைத் தண்டிக்கலாமா? நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் சாதகமான பலன் கிடைப்பது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும். தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பது தமிழ் மக்களுக்குத் தண்டனை வழங்குவதற்குச் சமன்.

அ[illegible]கத்துக்கு ஆதரவான [illegible]ளே தெரிவுக் குழுவில் பெரும்பான்மையாக இருக்கப் போகின்றன என்பதால் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி ஏதேனுமொரு முடிவைத் திணிக்க முயற்சிப்பார்கள் என்றும் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கும் அவர்கள் முடிவெடுக்கலாம் என்றும் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்கள். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றாமல் இருப்பதற்காக இக்காரணங்களையும் அவர்கள் முன்வைக்கின்றார்கள். இவையும் நொண்டிச் சாட்டுகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

பெரும்பான்மை பலம் பற்றிய வாதத்தை முதலில் பார்ப்போம். அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கின்றது. அந்தப் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி எந்தத் தீர்வையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவும் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறவும் அரசாங்கத்தினால் முடியும். அந்த வகையில் அரசாங்கம் செயற்படாமலிருப்பதற்கு அடிப்படையான ஒரு காரணம் உண்டு. தமிழ் பேசும் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு தீர்வைத் திணிப்பதில் அரசாங்கம் எதிர்நோக்கக்கூடிய பல நெருக்கடிகள் இருக்கின்றன. இவ்விடயத்தில் சர்வதேச சமூகத்துக்குப் பதில் கூறவேண்டிய நிலையும் ஏற்படலாம். இதேநிலை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும் உண்டு. அங்கேயும் அரசாங்கம் பெரும்பான்மைப் பலத்தைப் பிரயோகித்து ஒரு தீர்வைத் திணிப்பது சாத்தியமில்லை. அப்படியான ஒரு தீர்வைத் திணிப்பதானால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் போகாமலே அத்தீர்வைத் திணிக்கும் பலம் அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்புக் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இந்த அடிப்படையில் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியவற்றின் ஒவ்வொரு பிரதிநிதி அரசாங்கக் குழுவில் அங்கம் வகிக்கின்ற அதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுடன் முஸ்லிம் கட்சிகளினதும் ஒவ்வொரு பிரதிநிதி அக்குழுவில்அங்கம் வகிப்பார். கட்சி அடிப்படையில் பார்க்கும்போது, தமிழ் பேசும் மக்களுக்குச் சாதகமான கட்சிகளின் எண்ணிக்கையே அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவில் கூடுதலாக இருக்கும்.அத்தோடு, கூட்டமைப்பின் நேச அணியான ஐக்கிய தேசியக் கட்சியையும் கவனத்தில் எடுக்கலாம். பெரும்பான்மைப் பலத்தைப் பிரயோகித்துத் தமிழ் மக்களுக்குப் பாதகமான ஒரு முடிவை நாடாளுமன்றத் தெரிவுக் குழு எடுப்பதற்கான நிலை இல்லை என்பதே உண்மை நிலை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கிவிடுவார்கள் என்ற வாதத்தைப் பார்ப்போம். பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்றால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப்போய்த்தான் அதைச் செய்யவேண்டும் என்பதில்லை. கைவசமுள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தியே அதைச் செய்யலாம். அப்படியான ஒரு ஆலோசனை வரும் பட்சத்தில் இடதுசாரிக் கட்சிகளும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் அதை ஆதரிக்கப்போவதில்லை. அத்தகைய ஒரு ஆலோசனை வருகின்றதென்றால் அதை எதிர்ப்பதற்காகவாவது கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்குச் செல்லவேண்டுமே.

கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழு அண்மையில் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு ஓரிரு தினங்கள் முன்னர் சுமந்திரன் ஒரு அறிக்கை வெளியிட்டார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் முயற்சி மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் தனக்கு இருப்பதாகவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கலந்துரையாடல்கள் ஏற்கனவே, வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை இரத்துச் செய்யும் வகையில் இடம்பெறமாட்டா என்ற உத்தரவாதத்தை அரசாங்கத்திடமிருந்து கோரப்போவதாகவும் அந்த அறிக்கையில் கூறியிருந்தார். இந்தியாவிலிருந்து திரும்பிய பின் அந்தக் கதையே இல்லை. அரசாங்கத்திடமிருந்து அப்படியான உத்தரவாதத்தைக் கூட்டமைப்பு கோரவில்லை. தீர்வைத் தவிர்ப்பதுதான் கூட்டமைப்பின் நோக்கமாக இருக்கையில், இவ்வாறான அறிக்கைகளை வெளியிட்டு முயற்சியைத் திசைதிருப்ப வேண்டாம் என்று சுமந்திரனுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கலாம்.

அரசியல் தீர்வில் கூட்டமைப்புக்கு அக்கறை இல்லை. அதனால் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க மறுப்பதோடு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்தும் விலகி நிற்க முயற்சிக்கின்றது. அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டுமென வலியுறுத்துவதும் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிப்பதற்குச் சொல்லும் காரணங்களும் மறைவான நிகழ்ச்சி நிரலுடன் கூட்டமைப்பு அரங்கேற்றும் நாடகம்.

# பரிந்துரைகளை அமுலாக்குவதில் முளைவிடும் புதிய நெருக்கடிகள்



நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந் துரைகளை முழுமையாக அமுல் செய் வதில் அரசுக்கு நடைமுறைச் சிக்கல்கள் எழுந்துள்ளதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்திய வெளியுறவு அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஹரியானா மாநிலம் குர்கானில் கடந்த வியாழக்கிழமை தொடங்கிய இந்தியப் பெருங்கடல் நாடுகளின் பிராந்திய ஒத்து ழைப்பு அமைப்பின் (ஐ.ஓ.ஆர்-ஏ.ஆர்.சி) 19 ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற் காக இலஙகை வெளியுறவு அமைசசர ஜி.எல். பீரிஸ், டில்லி சென்றுள்ளார்.

இந்தக் கூட்டத்தின் இடையே சல்மான் குர்ஷித்தும் ஜி.எல். பீரிஸும் வெள்ளிக் கிழமை காலையில் தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தினர். சுமார் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு நடைபெறறது.

இந்திய - இலங்கை நல்லுறவு குறித் தும் இலங்கையில் போரினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு இந்திய நிதியுதவியு டன் செயற்படுத்தப்படும் மறுவாழ்வுத் திட்டங்கள் குறித்தும் இரு அமைச்சர் களும் ஆலோசனை நடத்தினர்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளா கும் சம்பவத்துக்கு பீரிஸிடம் சல்மான் குர்ஷித் கவலை தெரி வித்தார். இருதரப்பு உறவில் இந்த விவகாரத்தால் தொடர்ந்து பிரச்சினை ஏற்படுகிறது என்பது இலங்கை தரப்பிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

அப்போது கடந்த ஞாயிற்றுக் கிழமை இலங்கை கடற்படை யினரால் சிறைப்பிடித்துச் செல்லப பட்ட 5 தமிழக மீனவர்களை உடனே விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதில் அளித்த பீரிஸ், இந்திய இலங்கை மீனவர்களின் வாழ்வாதார மாக மீன்பிடித் தொழில் விளங்குகிறது. இந்த விவகாரத்தில் இரு நாடுகளின் அதிகாரிகள் நிலையில் பேசித் தீர்வு காண முயற்சிப்பதைவிட மீனவர்கள் நிலையில் பேசி சுமுகத் தீர்வை எட்ட இரு தரப்பு மீனவர்களும் முன்வர வேண்டும்.

இது தொடர்பாக விவாதிக்க விரை வில் இரு நாட்டு மீனவர்களின் கூட்டுக் குழுக் கூட்டத்துக்கு இலங்கை அரசு ஏற்பாடு செய்யும் என்றார்.

இதைத் தொடர்ந்து பேசிய குரஷித், அந்தக் கூட்டத்தின் முன்னோட்டமாக இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள 5 தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும். இதுபோன்ற நடவடிக்கை மூலம்தான் தமிழக மீனவர்களின் மனதில் இலங்கைப் படை மீதுள்ள கசப்புணர் வைப் போக்க முடியும் என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குர்ஷித், இலங்கை அமைச்சருடனான பேச்சு வார்த்தை திருப்திகரமாக இருந்தது. தமிழக மீனவர்களை அந்நாட்டு அரசு விடுதலை செய்யும் என்று எதிர்பார்க்கி றேன் என்றார்.

அவரைத் தொடர்ந்து ஜி.எல்.பீரிஸ் கூறியதாவது,

இலங்கையின் வளர்ச்சியில் இந்தியா வின் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகும். இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர் களுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங் களைப் புனரமைக்கவும் இந்தியா பெருமள விலான உதவிகளைச் செய்து வருகிறது.

இதன் பயனாக கடந்த நிதியாண்டில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சி 22 சதவீதமாக இருந்தது. இலங்கையில் போருக்குப் பிந்தைய எல்.எல்.ஆர்.சி (படிப்பினை நல்லிணக்க ஆணையம்) அறிக்கையை அமுல்படுத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அதைச் சரி செய்து இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க எங்கள் நாட்டு அரசு முயற்சித்து வருகிறது என்றார் பீரிஸ.

## புலிகளின் ஆயுதப் புதையல்களை இலக்கு வைத்து வேட்டை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்கும் நோக்கில் விசேட நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இறுதிக்கட்ட போரின்போது முல் லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலி கள் பாரியளவு ஆயுதங்களை புதைத் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிலத்தின் கீழ் புதைக்கப் பட்டுள்ள ஆயுதங்களை மீட்பதற்காக அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன் படுத்தப்பட உள்ளன.

ஆயுதங்களை மீட்கும் விசேட நட வடிக்கை நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி யுள்ளது.

கரையோரத்தின் ஆழமான குழி களைத் தோண்டி அதனுள் பாதுகாப்பான முறையில் புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. பல்வேறு தொழில்நுட்பங் களைப் பயன்படுத்தி விடுதலைப புலிகள் முல்லைத்தீவு பகுதியில் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கக் கூடும் என இரா ணுவத்தினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## திவிநெகும விவகாரம் சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசு தயார்

(கொழும்பு)

உயர்நீதிமன்றம் அறிவுறுத்துமாயின் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக வேனும் திவிநெகும சட்டமூலத்தை சட்டமாக்குவோம் என பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சூளுரைத்தார்.

வடமாகாண சபை இல்லாத நிலையில் வடமாகாண ஆளுநர் இந்தச் சட்டமூலத் துக்கு ஒப்புதலளிக்க முடியுமா? என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கின் தர்ப்பு இப்போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உயர் நீதி மனறத்தின் வியாக்கியானம் நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் அறிவிக்கப்படும்.

சில சமயம் இந்த சட்டமூலத்துக்கான மக்களின் ஒப்புதலை ஒரு சர்வசன வாக்கெடுப்பு மூலம் பெறவேண்டிய தேவையும் எழலாம். நாம் அதற்கும் தயாராகவுள்ளோம். நாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து இந்த சட்டமூலத்தை உரிய முறையில் சட்டமாக்குவோம். வீட்டுத்துறை பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்து நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம் மூலம் மக்களை வறுமையிலிருந்து மீட்பதே திவிநெகும இயக்கத்தின் நோக்கம் என்றார்.

விரைவில்



இலங்கையில் நடைபெற்ற யுத்தம், யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்திகளை காட்சிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சி ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் தலைமை யகத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியைப் பார்வையிடு வதற்காக வருகை தந்த மனித உரிமைகள் கவுன்ஸில் தலைவர் லோரா லஷ்ரேவுக்கு, அமைச்சர் மகிந்த சமரசிங்க புகைப் படங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம். ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவும் படத்தில் காணப்படு கிறார்.

## குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டாலும் பிரதம நீதியரசரை பதவி நீக்க முடியாது

### இப்படிக் கூறுகிறார் ரணில்

(கொழும்பு)

குற்றவியல் பிரேரணை சமர்ப பிக்கப்பட்ட மாத்திரத்தில் பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்ய முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்டமாக நாடாளு மன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படும்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஓர் நீதிமன்றக் கட்ட. மைப்பை ஒத்திருக்கும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு வில் பங்கேற்று கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அரசாங்கம் காலத் திற்கு காலம் பல்வேறு மாறு பட்ட கருத்துக்களை முன்வைத்து, மக்கள் பிரச்சினைகளைத் திசை திருப்ப முயற்சிக்கின்றது.

வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்சினையை திசை திருப்பும் நோக்கிலேயே 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பான பிர சாரங்கள் வலுப்பெற்றுள்ளன.

13 ஆம் திருத்தச் சட்டத்தைப் பற்றி பேசுவதனால் பொருட்கள் 



சேவைகளுக்கான விலையை குறைக்க முடியாது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருனாகல் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பள்ளிவாசலுக்குள் புகுந்து தாக்குதல் குருநாகலில் அடாவடித்தனம்

(கொழும்பு)

குருநாகல் - தெலும்புகல்ல பிரதேசத்தில் உள்ள பள்ளி வாசலை 60 பேர் கொண்ட குழுவினர் உடைத்துள்ளதாகவும் அத்துடன், அங்கு தொழுகை நடத்தியோர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இரு மார்க்கக் குழுக்களுக் கிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடே இத்தாக்குதலுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படு கிறது.

இத்தாக்குதலின் போது காயமடைந்த 10 இற்கும் மேற் பட்டோர் ரிதிகம மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக கொகரல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பழைமை வாய்ந்த ஜும்ஆப் பள்ளிவாசலுடன் முரண்பட்டுக் கொண்டு பிரிந்த சென்ற அணியினர், புதிய ஜும்ஆப் பள்ளி



வாசலை ஆரம்பித்துள்ளனர். பின னர் நீதிமன்றத்தில் இரு சாராருக்கிடையே இதுகுறித்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீதிமன்றம் புதிய பள்ளிவாசலைச் சார்ந்த குழுவினருக்கு தொழுகையை மேற்கொள்ளுமாறு தீர்ப்பு வழங கியது.

இதனை அடுத்து புதிய பள்ளியில் இந்த அணியினர் தொழுகையை மேற்கொண்டி ருந்தபோது அங்கு வந்த மற்று மொரு குழுவினர் இத்தாக்கு தலை மேற்கொண்டதாக கொக ரலல பொலிஸார் தெரிவித்த துடன், இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

## கூட்டமைப்பின் தூதுக்குழு நாளை சீனாவுக்குப் பயணம்

### தீவிர அரசியலில் குதித்தார் வித்தி

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் தீவிர அரசியல் செயற்பாடு களில் குதித்துள்ளார். இதன் வெளிப்பாடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விசேட தூதுக்குழு ஒன்றுக்கு தலைமை தாங்கி சீனாவுக்கு விஜயம் செய்ய வுள்ளார்.

சீன அரசின் விசேட அழைப் பின் பேரில் நாளை இத் தூதுக் குழு சீனாவுக்கும் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் தமிழரசுக் கட்சியின் ஊடகத்துறைக்குப் பொறுப்பான உதவிச் செய லாளரும் சிரேஷ்ட தமிழ் ஊடக வியலாளருமான ந.வித்தியாதரன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சுகிர்தன், கிழக்கு மாகாண சபைத் தேர்த லின் போது மட்டக்களப்பு மாவட டத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சார்பில் போட்டியிட்ட கிருஷ்ணபிள்ளை சேயோன் ஆகியோர் அடங்குகின்றனர்.

அபிவிருத்தி, வறுமை ஒழிபபு ஆகியன தொடர்பான கொள்கை மற்றும் வழிமுறைகள் என்ற தலைப்பில் - சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்துள்ள பல்வேறு அரசியல் கலந்துரையாடல்களில் இந்தக் குழுவினர் பங்குபற்று வர். இம்மாதம் 5 ஆம் திகதி முதல 15 ஆம் திகதிவரை இக்குழு வினர் சீனாவில் தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாவாந்துறை மக்களுக்கு உதவி




(யாழ்ப்பாணம்)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நாவாந்துறை பகுதிக்கு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென ரின்(உதயன்) நேரில் சென்று பார்வையிட்டதுடன், உடனடியாக பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.நகரப் பிரதேசத்தின் மிகவும் தாழ்ந்த பகுதிகளான நாவாந்துறை மற்றும் நித்திய ஒளி, அண்ணா சனசமூக நிலையப்பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியதுடன், மிக நீண்ட காலமாக இப்பிரதேசங்கள் தொடர்ச்சியான வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படுவதால் இதற்கான மாற்று ஏற்பாடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடாக தொடர்மாடி குடியிருப்புக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அவர் இதன்போது தெரிவித்தார்.

இவ் விஜயத்தின் போது ஈ.பி.டி.பி.யின் யாழ். நகர பொறுப்பாளரும் மாநகர சபை உறுப்பினருமான துரைராஜா இளங்கோ(றீகன்) உடனிருந்தார்.



யாழ்ப்பாணம் - நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது யாழ். வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் மாணவியொருவருக்கு பரிசு வழங்குவதைக் காணலாம். (105)

## குறும்படம் தயாரிப்பு

(மன்னார்)

உலக உளநல தினத்தினை முன்னிட்டு ம்ன்னார் வலயக்கல்வி அலுவலகத்தின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவினால் B+ve (நேர்மனப்பாங்கு) எனும் குறும்படம் தயாரித்து வெளியிடப்பட்டது. இக் குறும்படமானது மாணவர்களிடத்தில் நேர்மனப்பாங்கை ஊக்குவிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணக்கல்வித் திணைக்களத்தினால் உலக உளநல தினத்தை சிறப்பிப்பதற்காக வலயங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமையவே இக்குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## மீன் வியாபாரத்திற்கு அதிகளவு வாடகை

### சங்கானை மீன் வியாபாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் சங்கானை சந்தையில் மீன் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் தாம் ஏனைய பிரதேசங்களிலுள்ள மீன் வியாபாரிகளை விட அதிகளவில் மீன் வியாபாரத்திற்காக வாடகை செலுத்துவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த மீன் சந்தையில் 43 வியாபாரிகள் வரை மீன் வியாபாரம் செய்து வருவதாகவும் நாம் ஒரு மேல் கல்லிற்கு 40 ரூபா இட வாடகையும், கீழ் கல்லுக்கு 30 ரூபா இடவாடகையும் செலுத்தி வருவதுடன் ஒரு கிலோ நல்ல மீனுக்கு 5 ரூபா வீதமும், தரம் குறைந்த மீனுக்கு 3 ரூபா வீதமும் வரி செலுத்தி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் தற்போது மீனின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் அடுத்த வருடம் முதல் எம்மால் இந்த வரி கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

யாழ் கல்வியங்காடு மீன் சந்தையில் எவ்வளவு மீன் கொள்வனவு செய்து விற்றாலும் 100 ரூபா தான் வரியாக வியாபாரிகள் செலுத்துகின்றனர்.

அதேபோல் கொக்குவில் சந்தையிலும் எவ்வளவுதான் மீன் விற்றாலும் 70 ரூபா வரியாக அறவிடப்படுவதாக வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில் சங்கானை சந்தையில் மட்டும் இவ்வாறு வரி அறவிடப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் மறுத்தால் வீதியில் போட்டி வியாபாரம் செய்வோம் எனவும் இச்சந்தை மீனவர்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

## இடைக்குறிச்சி பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(வரணி)

வரணி இடைக்குறிச்சி கிழக்கு பகுதியில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் வாசல் பகுதியில் நிறுத்தியிருந்த துவிசசக்கரவண்டியைக் களவாடிச் சென்றுள்ளனர்.

மேலும் இன்னுமொரு வீட்டில் திருடமுற்பட்ட வேளை வீட்டுக்காரர் விழிப்படைந்ததால் தப்பியோடியுள்ளனர்.

மற்றுமோர் ஆட்களற்ற வீட்டில் மின்சாரத்தை துண்டித்துவிட்டு திருட்டு முயற்சிக்கு தயாரான போது அயல் வீட்டுக்காரர் சந்தேகம் கொண்டு நாய்கள் சத்தமிட பார்வையிட்ட போது திருட[illegible]ர் தலை தெறிக்கத் தப்ட[illegible] உள்ளனர். இப்படி தொட[illegible] திருடர்களால அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சத்துடன் விழிப்புடனும் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (150)

## முரசின் இன்றைய பலன்

(04.11.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 19 ஆம் திகதி.
நட்சத்திரம்: திருவாதிரை முற்பகல் 3.26 வரை. சித்தயோகம்.
திதி: பஞ்சமி முற்பகல் 11.22 வரை. இராகுகாலம் 4.34 - 6.04 வரை.
சுபநேரம் 9.04 - 10.34 வரை எமகண்டம் 12.04 - 1.34 வரை.
குளிகன் காலம் 3.04 - 4.34 வரை. கேதாரகௌரி விரதம் 12ஆம் நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்களில் புதிய உற்சாகம். முடியாமலிருந்த வேலை எளிதாக நிறைவேறும். முயற்சிக்குப் பலன். போட்டியாளர்களை வியப்பில் ஆழ்த்தும். உபரி வருமானம். சமயோசிதம். |
| ரிஷபம் | மனதில் அமைதி. இல்லறத்துணையின் ஆலோசனை உதவும். தொழில் அனுகூலம். வரவை விட செலவு கூடும். மருத்துவச் செலவு. தியானம், தெய்வ வழிபாடு. வெளியூர் நற்செய்தி. |
| மிதுனம் | செயல்களில் சமூக பொறுப்புணர்வு. நல்லோர்கள் பாராட்டுவர். தொழில் அபிவிருத்தி. பணவரவும், நன்மையும். கடன் தீரும். மாணவர்கள் தேர்ச்சி. உறவுகள் தேடி வரும். பெருமிதம். |
| கடகம் | பேச்சில் மங்கலத்தன்மை. சான்றோர் அரவணைப்பு. வேலையில் மாற்றம். எதிர்பார்த்த பணவரவு. குடும்பத் தேவை நிறைவேற்றல். பிள்ளைகள் புரிந்துணர்வு. பாராட்டும் மேன்மையும். |
| சிம்மம் | இலட்சியக் கனவு நிறைவேறும். சமூகத்தில் நன்மதிப்பு. வேலையில் திருப்தி. சராசரி பணவரவு. பிள்ளைகள் விரும்பியது செய்வீர்கள். நண்பர்களுடன் விருந்து. நிறைவான நாள். |
| கன்னி | மாறுபட்டு நடந்தவர்களும், அன்பு பாராட்டுவர். புதிய அனுகூலங்கள். தொழில் வளர்ச்சி. கௌரவமும் யோகமும். பணவரவு முன்னேற்றம். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுப செய்தி. |
| துலாம் | பேச்சில் நேர்மையும் வசீகரமும். புதியவர்கள் நட்பு. சகோதர ஒத்துழைப்பு. தொழில் வளர உதவிகள் கிடைக்கும். ஆதாயம் பெருகும். அறப்பணி ஆர்வம். உடல்நல பலம்பெறும். |
| விருச்சிகம் | வாழ்வில் நடந்தவை அசைபோடல். ஊக்கமுடன் உழைப்பதால் வரவும் பெருகும். குறுக்கீடுகள் விலகும். கொஞ்சம் கடன் பெறுவீர்கள். குடும்பத்தில் சச்சரவு வந்து நீங்கும். |
| தனுசு | நற்செயல்களுக்குப் பாராட்டில்லாத வருத்தம். பொறுப்பு உணர்ந்து செயற்படுவீர்கள். உறவினர், நண்பர்க்கு உதவுவீர்கள். ஓய்வு உடல் நலத்திற்கு உதவும். பயணத்தில் மாறுதல். |
| மகரம் | பேச்சில் வெளிப்படை. பிறரிடம் பரிகாசம் கேட்க நேரும். நிலுவைப் பணிகள் நிறைவுறும். எல்லோரிடமும் நட்புடன் இருப்பீர்கள். சீரான பணவரவு. அவசிய பொருள் வாங்குதல். |
| கும்பம் | தாமதங்களுக்கு வருத்தம். வேலைப் பளு. சினம் அடிக்கடி வரும். கடன் வசூலாகும். உறவினர் வகையில் செலவு. போக்குவரத்தில் கவனம். குடும்பப் பிரச்சினையில் கூடுதல் கவனம். |
| மீனம் | சுற்றி நடப்பவையால் மனதில் பாதிப்பு. வாழ்வியல் அனுபவம் தைரியம் தரும். தொழில், தொல்லைகள் இருக்கும். பணவரவில் தாமதம். வீடு, வாகன திருத்தம். நண்பருடன் பயணம். |

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரை அதிகாரிகள் பார்வையிட்டனர்

(கரணவாய்)

அண்மையில் பெய்த காற்றுடன் கூடிய கனமழையினால் செல்வபுரம் கரணவாய் பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை அப்பகுதி கிராம சேவையாளர் ரி.புவனேந்திரன் பிரதேச செயலர் சிவஸ்ரீ, கரவெட்டி ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் செந்தில்நாதன் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கனமழையினால் இப்பகுதி வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுவதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது; குறித்த அதிகாரிகள் வெள்ளத்தையும் மக்களின் அவலத்தையும் பார்வையிட்டதுடன் குடிநீர் பிரச்சினை குறித்து மக்களால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பிரதேச செயலர் உடனடியாக பிரதேசசபைக்குத் தெரியப்படுத்தினார்.



உடனடியாக பிரதேச சபையினால் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏனைய உடனடித்தேவைகள் குறித்து அதிகாரிகள் கேட்டறிந்ததுடன் அவற்றை நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தனர். (18)

## கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

கொடிகாமம் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளாக திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை கொடிகாமம் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு விவசாய செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் வயல் நிலங்களை நாசமாக்கி வருகின்றன. இதனால் நெற் செய்கை பாதிப் படைவதுடன் தாம் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரி விக்கும் மக்கள் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைக் கட்டுப் படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகளும், பொதுமக்களும் கேட்டுக்கொள்கின்றனர்.

# சனத் உட்பட 16 வீரர்களுக்கு உதியம் வழங்கப்படவில்லை

கனடாவில் இடம்பெற்ற ருவென்ரி-20 போட்டியொன்றில் பங்குபற்றிய 16 வீரர்களுக்கு அப்போட்டிக்கான ஊதியம் இன்னமும் வழங்கப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது. சனத் ஜெயசூரிய உட்பட சர்வதேச வீரர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.


சனத் ஜெயசூரிய, சக்லைன் முஷ்தாக், கைல் மில்ஸ், ஜேக்கப் ஓரம், மார்க் பௌச்சர், டெவோன் ஸ்மித், ரீனா பெஸ்ட், பிரென்டன் ரெய்லர் உட்பட 16 வீரர்களுக்குரிய ஊதியமே வழங்கப்படவில்லை.

கனடாவில் இடம்பெற்ற அனைத்து நட்சத்திர ருவென்ரி-20 போட்டியில் இவ்வீரர்கள் பங்குபற்றியிருந்த போதிலும், அவர்களுக்கென வழங்கப்படவேண்டிய ஊதியத்தை ஏற்பாட்டுக்குழுவினர் வழங்காத நிலையில் அதற்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொறென்டோவில் இடம்பெற்ற இப்போட்டியை கனடாவைச் சேர்ந்த கற் ரோஸ் கஸ்டம் டிசைன்ஸ் என்ற நிறுவனம் கனடாவின் கிரிக்கெட் சபையின் ஒப்புதலுடன் நடாத்தியிருந்தது.

வீரர்களுக்குரிய ஊதியம் வழங்கப்படாமை குறித்து வருத்தமடைவதாகத் தெரிவித்த சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிம் மே, ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை வீரர்கள் நிறைவேற்றியுள்ள நிலையில் அவர்களுக்கான ஊதியம் வழங்கப்படாமை குறித்து ஏமாற்றமடைந்துள்ளதாகவும், அதன்காரணமாக சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# டெஸ்டில் ஓய்வு கவலையளிக்கிறது



(கொழும்பு)

டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற முடியாமல் போனது கவலையே. எனது முழங்கால் உபாதை காரணமாகவே என்னால் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற முடியாது போனது என இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்தார்.

சர்வதேசப் போட்டிகளுக்கு நான் டெஸ்ட் வீரராகவே நுழைந்தேன். டெஸ்ட் போட்டிகளிலேயே பந்துவீசுவது குறித்து அதிகமாகக் கற்றுக் கொண்டேன். புதிய பந்துடன் எவ்வாறு பந்துவீசுவது, பழைய பந்துடன் எவ்வாறு துடுப்பாட்ட வீரர்களைத் தடுமாச் செய்வது, எவ்வாறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவது என்பதை எனக்கு டெஸ்ட் போட்டிகளே கற்றுத் தந் தது. 2008ஆம் ஆண்டு மிகப்பெரிய உபாதைக்கு உள்ளானேன். அப்போது என்னை யாருமே கணக்கெடுத் திருக்கவில்லை. அதன் காரணமாகவே நான் அதிக காலம் டெஸ்ட் போட்டிகளில்பங்குபற்ற முடியாமல்போனதற்கு முக்கிய காரணம். 2010ஆம் ஆண்டு முத்தையா முரளிதரனின் இறுதி டெஸ்ட் போட்டியில் அவரின் கோரிக்கையின் காரணமாகவே பங்குபற்றினேன். 2008ஆம் ஆண்டுக்குப் பின் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றும் எண்ணத்தை நான் கைவிட்டிருந்தேன். முரளியின் கோரிக்கையின் காரணமாகவே நான் 2010ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டியில் பங்குபற்றினேன். முரளிதரன் மீது நான் அதிக மரியாதையைக் கொண்டிருக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# வட்சன் ஆடுவதில் சந்தேகம்

அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வட்சன் காலில் உபாதையடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக விரைவில் ஆரம்பிக்கவுள்ள தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடரில் ஷேன் வட்சன் பங்குபற்றுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சம்பியன்ஸ் லீக் ருவென்ரி–20 தொடரின் நடுவிலிருந்து அவுஸ்ரேலியாவிற்குத் திருப்பி அழைக்கப்பட்ட ஷேன் வட்சன், தென்னாபிரிக்காவிற்கெதிரான டெஸ்ட் தொடருக்கு முன்னதாக பயிற்சியாக நியூ சௌத் வேல்ஸ் அணிக்காகப் போட்டியில் பங்குபற்றினார். இப்போட்டியில் ஷேன் வட்சன் துடுப்பெடுத்தாடி 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்திருந்தார். ஆனால் பந்துவீச ஆரம்பிக்கும் போது அவர் கால் உபாதை தொடர்பாக முறையிட்டதோடு மைதானத்தை விட்டும் வெளியேறியிருந்தார். அத்தோடு இப்போட்டியில் அவர் மேலும் பங்குபற்றமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் அவர் பங்கேற்பரா என்ற கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டங்களுக்கிடையிலான குத்துச்சண்டை

# ஆப்கான் வீரர் வெற்றி



உலக குத்துச் சண்டை அமைப்பின் கண்டங்களுக்கிடையிலான போட்டியில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் ஹமிட் ரஹீமி வெற்றி பெற்றுள்ளார்.


இப்போட்டி நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானில் நடைபெற்றது.இப்போட்டியில் ஆப்கானிஸ்தானை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகக் கொண்ட ஹமீட் ரஹீமி தன்னுடன் மோதிய தன்சானிய நாட்டைச் சேர்ந்த சைட் போல்வாவைத் தோற்கடித்தார்.

இந்த வெற்றி தனக்குக் கிடைத்த வெற்றி அல்ல. ஆப்கானிஸ்தானுக்கு கிடைத்த வெற்றி எனவும் தன் நாட்டு மக்களை தான் மிகவும் நேசிப்பதாக இவ் வெற்றியைப் பெற்ற பின் அங்கு கூடி இருந்த தன் இரசிகர்களுக்கு அவர் தெரிவித்தார்.

இந்த வெற்றி பல்லாயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இப்போட்டியை பல்லாயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் நாட்டு மக்களும், அரசியல்வாதிகளும் நேரடியாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் பார்வையிட்டுள்ளனர்.

குத்துச்சண்டைப் போட்டிகளுக்கு தலிபான் இயக்கம் தடை விதித்திருக்கும் இந்தத் தருணத்தில், இவ் வெற்றி பெறப்பட்டுள்ளமை முக்கியத்துவம் பெறுகின்றது.இந்தப்போட்டி நடைபெற்ற இடத்தில் பலத்த காவல் போடப்பட்டதாகவும், பல சோதனைகளுக்குப் பின்னரே பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், காவலுக்குப் போடப்பட்ட காவலாளிகள் கூட ஹமிட் ரஹீமி வெற்றிபெற்ற போது சந்தோஷத்தில் தங்களையறியாமலேயே துள்ளிக்குதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முர்ரே அதிர்ச்சித் தோல்வி



(பாரிஸ்)

பி.என்.பி. பாரிபா மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் பிரபல வீரர் ஆன்டி முர்ரே அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார்.

மூன்றாவது சுற்றில் போலந்து வீரர் ஜெர்ஸி ஜனோவிக்சுடன் மோதிய முர்ரே 7-5, 6-7 (4-7), 2-6 என்ற செட் கணக்கில் போராடித் தோற்றார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு 2ஆவது சுற்றில் இந்தியாவின் மகேஷ் பூபதி , போபண்ணா ஜோடி 6-0, 6-4 என்ற நேர் செட்களில் பென்னாட்டா , மன்னரினோ ஜோடியை வீழ்த்தியது.

மற்றொரு 2ஆவது சுற்று ஆட்டத்தில் லியாண்டர் பயஸ், மெல்சர் ஜோடி தோல்வி அடைந்தது.

# டோனிக்குப் பதிலடி

(புதுடில்லி)

யுவராஜ் சிங் உடற்தகுதி எப்படி உள்ளது என்பதை தேர்வாளர்கள் மதிப்பீடு செய்து கொள்வர் என அவரது அம்மா ஷப்னம் ஆவேசமாகத் தெரிவித்தார்.

இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங். புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீண்ட இவர், துலீப் ரொபி அரையிறுதியில் இரட்டை சதம் அடித்தார். இங்கிலாந்து அணிக்கு எதிரான பயிற்சியில் அரைசதம் அடித்து, 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவரது உடற்தகுதி குறித்து இந்திய அணி கப்டன் டோனி கூறுகையில், யுவராஜ் சிங்கினால், இரண்டு நாட்கள் களத்தடுப்புச் செய்ய முடியுமா என்பதை முதலில் மதீப்பீடு செய்ய வேண்டும் என தெரிவித்து இருந்தார்.

இதற்கு யுவராஜ் சிங் அம்மா ஷப்னம் பதிலடி கொடுத்துள்ளார். ஷப்னம் கூறியதாவது:

சரியான உடற்தகுதியை கொண்டு வர யுவராஜ் சிங் கடினமாகப் போராடினான். இதற்கான பலன் தான் துலீப் ரொபியில் கிடைத்தது. டெஸ்ட் அணியில் ராவிட், லக்ஸ்மன், கங்குலி இருந்த போது, நிரந்தர இடம் பிடிப்பது என்பது மிகவும் கடினமாக இருந்தது.

தற்போது யுவராஜுக்கு வாய்ப்பு கிடைக்கத் தொடங்கியுள்ளது. தனது துடுப்பாட்டத் திறமை மூலம் இதை உறுதியாகப் பிடித்துக் கொள்வான் என்று நம்புகிறேன். இந்நிலையில், யுவராஜ் சிங் உடற்தகுதி குறித்து தேர்வாளர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். ஏனெனில், துலீப் ரொபில் யுவராஜ் சிங் இரட்டை சதம் அடித் ததை தேர்வாளர்கள் பார்த்துள்ளனர். எனவே, ஏனையவர்கள் தங்கள் வேலையை மட்டும் பார்த்தால் போதும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# விமானத்தை தவறவிட்ட சுசந்திகா

இந்தோனேஷியாவில் நடைபெறும் ஆசிய பெண்களுக்கான மெய்வல்லுநர் விளையாட்டு மாநாட்டில் இலங்கையின் சார்பில் பங்கேற்கவிருந்த இலங்கை குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க, விமானத்தை தவறவிட்டமையினால் மாநாட்டில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 5ஆம் திகதி நிறைவடையும் இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு புறப்படவிருந்த விமானத்தில் பயணிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், விமானம் புறப்படுவதற்கான நேரத்தை தவறாக விளங்கிக்கொண்ட சுசந்திகா, மறுநாள் 31ஆம் திகதி இரவு விமான நிலையத்துக்கு சென் றடைந்துள்ளார். இதனால் அவருக்கு குறித்த விமானத்தில் தனது பயணத்தை மேற்கொள்ள முடி யாமல் போய்விட்டது.

இந்நிலையில்,அவருடைய கையடக்கத் தொலைபேசியும் செயலிழந்து இருந்துள்ளது. மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் இலங்கையின் சார்பில் கலந்து கொள்ளவிருந்த சுசந்திகா உரிய நேரத்தில் சமூகமளிக்காததை அடுத்து இது தொடர்பில் இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கத்துக்கு முறையிட்டுள்ளனர். அந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து பார்த்தபோது, விமானம் புறப்படுவதற்கான நேரத்தை தவறாக விளங்கிக் கொண்டதனால் சுசந்திகா வினால் மாநாட்டுக்கு செல்லமுடியாமல் போய்விட்டது என தகவல்கள் கிடைத்ததாக இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கத்தின் பிரதித் தலைவர் சுனில் ஜயவீர தமிழ்மிரருக்கு தெரிவித்தார்.

# எச்சரிக்கையுடன் எதிர்கொள்வோம்

(புதுடில்லி)

சச்சின் டெண்டுல்கர் அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் வீரர். இந்திய அணிக்கெதிரான தொடரில் மிகுந்த எச்சரிக்கையுடன் அவரை எதிர்கொள்வோம் என இங்கிலாந்து அணி கப்டன் குக் தெரிவித்தார்.



உள்ளூர் போட்டியான ரஞ்சியில் சச்சின் டெண்டுல்கர் சதம் அடித்து தனது ஆட்டத்திறனை வெளிப்படுத்தியிருக்கின்றார். கிரிக்கெட் டில் அவர் சிறந்த வீரர். அவரது ஆட்டத்திறன் .முடிந்துவிட்டதாக யாரும் நினைக்க வேண்டாம். அவரை நாங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் எதிர்கொள்வோம்.

சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களிலேயே போட்டிகள் நடைபெறுவதைப் பற்றி எங்களுக்குக் கவலையிலலை.

அதில் எவ்வாறான வியூகங்களை அமைக்க வேண்டும் என்பது குறித்து எங்களுக்குத் தெரியும். போட்டிக் களத்தில் இவற்றை அனைவரும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே, இப்போட்டி சவால் நிறைந்த தொடர் என்பதில் ஐயமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இங்கிலாந்துக்கு சவாலான தொடர்



(கொல்கத்தா)

இந்தியாவுடன் டெஸ்ட் தொடர் இங்கிலாந்து அணிக்கு சவாலானது. அவர்கள் இந்த சவாலை நிரூபித்து காட்ட வேண்டிய நிலையில் உள்ளனர் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இந்தியாவுக்கு, இங்கிலாந்து அணி பலமுறை வந்து இருந்ததால் சாதகமான நிலை இருக்கலாம். அதே நேரத்தில் அஸ்வின், ஒஜா சுழற்பந்து வீச்சு இங்கிலாந்து வீரர்களுக்கு கடும் சோதனையாக இருக்கும்.

இந்திய அணி இங்கிலாந்து சென்றபோது எப்படிசவாலாக இருந்ததோ அது மாதிரி தான். இங்கிலாந்து அணிக்கு இந்திய டெஸ்ட் தொடர் சவாலானது. இங்கிலாந்து அணியில் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். துடுப்பாட்டம் அந்த அணிக்கு முக்கிய பங்கு வகிக்கும். ஆனால் இந்திய அணியின் சுழற் பந்தை இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களால் இந்திய ஆடுகளங்களில் சந்திப்பது தான் கடினமானது.

இங்கிலாந்து அணியில் ஸ்வான், பனீஸர், ஸ்மித் பட்டேல் போன்ற சிறந்த சுழற்பந்து வீரர்கள் உள்ளனர். இந்திய அணியின் துடுப்பாட்டத் திறன் டெண்டுல்கரின் ஆட்டத்திறனைப் பொறுத்து அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கூடைப்பந்தாட்ட வீரர்களுடனான கலந்துரையாடலின் போது வீரர்கள் இருப்பதையும், அமைச்சர் கருத்துத் தெரிவிப்பதையும் காணலாம்.

# வடக்கிற்கான கூடைப்பந்து மைதானம் குடாநாட்டில் அமைக்க நடவடிக்கை




(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்று வரும் தேசிய கூடைப்பந்தாட்ட போட்டிகளில் பங்கெடுக்கும் வடமாகாண மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அணிகளின் வீரர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கொழும்பில் தற்போது நடைபெற்று வருகின்ற தேசிய மட்டத்திலான கால்ரன் கூடைப்பந்தாட்டப் போட்டியில் பங்கெடுக்கும் வகையில் வடமாகாண மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அணிகளும் பங்குபெறவுள்ளன.

இந்தநிலையில் போட்டியில் பங்கெடுக்கும் முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினரை ஊக்கப்படுத்தும் முகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு தொகை நிதியுதவியை வழங்கியதுடன், தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, வடமாகாண கூடைப்பந்தாட்ட அணியினரும் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள போட்டியில் பங்கெடுக்கும் முகமாக கொழும்புக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வடமாகாணத்திற்கென கூடைப்பந்தாட்ட மைதானமொன்றை யாழ்.மாவட்டத்தில் புதிதாக அமைப்பது மற்றும் தேசிய ரீதியிலான கூடைப்பந்தாட்ட போட்டியை வருடந்தோறும் நடாத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் வடமாகாணகூடைப்பந்தாட்ட சங்கத்தினர் அமைச்சருடன் கலந்துரையாடினர். இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும். அதேவேளை அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் குறிப்பிட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த துறைசார்ந்தோருடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார். இதன் போது கூடைப்பந்தாட்ட சங்கச் செயலாளர் றமணன் உடனிருந்ததார்.

## ஒத்திவைக்கப்பட்டுள்ள தகுதிச்சுற்று ஆட்டங்கள்

(கொழும்பு)

ஏ.எப்.சி., கால்பந்து தொடரின் தகுதிச் சுற்று போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டன.

பெண்களுக்கான ஏ.எப்.சி., கால்பந்து தொடர் (16 வயதுக்குட்பட்ட) அடுத்த ஆண்டு நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்று கொழும்பில் (நவம்பர் 6-11) நடக்க இருந்தது. முதல் போட்டியில் (நவ.,6) இந்தியா, ஈரான் அணிகள் மோத இருந்தன. ஆனால், இலங்கையில் நிலவும் மோசமான வானிலை காரணமாக போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன.

இது குறித்து இலங்கை கால்பந்து கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், போட்டி நடக்கும் இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது. பேரிடர் மையம். தேவையில்லாத பயணங்களை தவிர்க்குமாறு. மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. அடுத்து வரும் நாட்களில் சாதகமான வானிலை நிலவும் என உறுதி கூற முடியாது. எனவே இப்போட்டியை ஒத்தி வைக்க முடிவு செய்துள்ளோம். இதற்கான புதிய திகதி, பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாண மட்ட கராத்தே 6 வயதுப் பிரிவில் ஜயனி 2 தங்கம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மட்ட கராத்தேப் போட்டியின் ஆறு வயதுப் பிரிவிற்கான சண்டை மற்றும் காட்டாப் போட்டியில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த உமாசங்கர் ஜயனி தங்கம் வென்றுள்ளார்.

இலங்கை கராத்தே சங்கத்தினால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண வீர, வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டி கடந்த மாத பிற்பகுதியில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் ஆறு வயது பெண்கள் பிரிவில் போட்டியிட்ட உமாசங்கர் ஜயனி சண்டைப் போட்டியில் த்ங்கம் வென்றதுடன் காட்டாப் போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்தார்.

இதேவேளை, 10 வயது ஆண்கள் பிரிவில் பங்குகொண்ட உமாசங்கர் ஹஜித் காட்டாப் போட்டியில் தங்கம் வென்றார். இவரும் யாழ். இந்து ஆரம்பப் பாடசர்லையில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தங்கம் வென்ற இருவரும் கராத்தே ஆசிரியர் மா. இரத்தினசோதியுடன் காட்சி கொடுப்பதைக் காணலாம்.

இதேவேளை, தேசிய மட்டப் போட்டி நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## மெய்வல்லுநர் போட்டி ஒத்திவைப்பு

(கொழும்பு)

தேசிய சம்பியன்ஷிப் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய வானிலையை கருத்திற்கொண்டு இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டு சங்கம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

தேசிய சாம்பியன்ஷிப் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளை நவம்பர் 13,14 மற்றும் 15ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் உப தலைவர் சுனில் ஜயவீர தெரிவித்தார். இக்காலப்பகுதியில் பங்குகொள்ளவுள்ள போட்டியாளர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், அவர்களுக்கான தங்குமிட வசதிகள் சிறப்பான [illegible]யில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி[illegible]ர்.

## மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் அணிகளின் கால்பந்து முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான கால்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகலில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் பலத்த போட்டி நிலவியது. இருந்தும் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை அடித்ததினால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் கைகள் ஓங்கி இருந்தது. முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அடித்தது. இரண்டாவது பாதியில் மேலும் ஒரு கோலினைப் போட்டு 3:0 என்று சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

## விரைவில் அரையிறுதி ஆட்டங்கள்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதாக கோட்டக் கல்வி வட்டாரங்களில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வயது அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அரையிறுதி ஆட்டங்கள் விரைவில் நடைபெறும் என மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் 14 வயதுப் பிரிவுக்கான போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், 16 வயதுப் பிரிவுக்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து வளாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும், 18 வயதுப் பிரிவுக்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், மற்றைய போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணோயதாக் கல்லூரி அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## எதிர்பார்ப்பு வேண்டாம்


இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் நான் அதிகம் சாதிப்பேன் என எதிர்பார்க்கவேண்டாம் என இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்தார்.

இந்தியா ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சு ஏதுவான ஆடுகளங்கள் தான். இருப்பினும் சுழற்பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொள்ளக்கூடிய பல துடுப்பாட்ட வீரர்கள் இந்திய அணியில் இருப்பதால் இந்தியாவில் சாதிப்பது சற்றுக் கடினமே.

இருப்பினும் என்னாலான முழு முயற்சிகளையும் வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்க முயற்சிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எங்களை விட்டுவிடுங்கள்!

இலங்கைத்தமிழர்களுக்கு சீமான் என்ன கட்டளையிடுகின்றார் என்றால் ஒரு வருடத்தில் பத்து மாதங்களில் மட்டும்தான் கொண்டாட்டங்களை கொண்டாடவேண்டுமாம் தவிர்க்கவேண்டிய மாதங்கள் மேமாதமும் நவம்பர் மாதமுமாம். கார்த்திகைமாதம் - 26ஆம் திகதி



- 2007ஆம் ஆண்டு பிரபாகரனின் பிறந்தநாள் நாம் தமிழர் இயக்கத்தலைவர் சீமான் தலைமையில் இலக்கம் 231, மில்னர் அவெனியு, ஸ்காபுறோவில் உள்ள பீற்றர் போல் மண்டபத்தில் பலர் முன்னிலையில் சபையோர் சாட்சியாக வெகுவிமர்சையாக கேக் வெட்டி கொண்டாடப் பட்டது. அதாவது மாவீரர்தினத்திற்கு முதல்நாள் கொண்டாடியிருக்கின்றார் என்றால் மாவீரர்களை மதிக்காமல் அவர்களின் இறந்த உடல்களில் மிதித்தே நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் கொண்டாடியிருக்கின்றார் என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

பின்னர் 2009ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் கனடாவிற்கு வந்த சீமானின் வன்முறையைத் தூண்டும் பேச்சுக்கள் அச்சுறுத்தலாக இருந்தபடியால் கனேடிய அதிகாரிகள் சீமானைக் கைதுசெய்து திருப்பி அனுப்பிவிட்டனர்.

2009ஆம் ஆண்டு மேமாதம் 19ஆம் திகதி பிரபாகரன் கொல்லப்பட்டதை மனதில் வைத்துக்கொண்டு (தமிழ்மக்கள் கொல்லப்பட்டதை அல்ல) வெளிக்காட்டாமல் மே மாதத்தை தவிர்க்கும்படி கட்டளையிட்டுள்ளார். பகிரங்கமாக பிரபாகரன் கொல்லப்பட்டதை வெளிக்காட்டினால் பிழைப்பு கெட்டுவிடும். ஆனால் தே.தி.மு. கட்சித் தலைவர் விஜயகாந் அண்மையில் டெசோ மகாநாடு சம்பந்தமாக தனது கருத்தை தெரிவித்து அளித்த பேட்டியொன்றில் பிரபாகரன் உயிரோடு இருக்கையில் கலைஞர் அவரை காப்பாற்ற முனைய வில்லை என்று கூறி பிரபாகரன் இறந்துவிட்டதை ஊர்ஜிதப்படுத்தினார். புலிகளைப்பற்றியோ அல்லது பிரபாகரனைப்பற்றியோ யாரும் விமர்சித்துவிட்டால் சீறும் சீமானோ அல்லது அல்லது பிரபாகரன் உயிரோடு இருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அங்குள்ள புலி ஆதரவுக் கட்சிகளோ பிரபாகரன் இறந்துவிட்டார் என்ற விஜயகாந்தின் கருத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இன்றுவரை மௌனமாகவே இருக்கின்றார்கள் என்றால் விஜயகாந்தின் கருத்துடன் உடன்படுகின்றார்கள் என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது. எனவே உங்கள் மௌனத்தை கலைத்து தமிழினத்தின் நன்மை கருதி உண்மையைக்கூறி சீமான் போன்றவர்கள் செயல்படுவது நல்லது.

கார்த்திகைமாதம் முழுவதும் மாவீரர்களின் மாதமாம் என்கிறார் சீமான். புலிகள் இயக்க உறுப்பினரான வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்த சங்கர் (சத்தியநாதன்) ஈழத்தில் காயப்பட்டு சிகிச்சைக்காக தமிழகம் கொண்டுசெல்லப்பட்டு 1982ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 27ஆம் திகதி அங்கு இறந்துவிட்டார். பிரபாகரன் அந்தநாளை 27ஆம் திகதியைத்தான் மாவீரர்தினமாக அறிவித்தார். கார்த்திகை மாதத்தை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஆரம்பத்தில் தமிழினத்தின் விடுதலைக்காக சில தமிழ் இளைஞர்களுடன் இணைந்து தலைமறைவுவாழ்க்கை வாழ்ந்து இலங்கை அரசுக்கு நெருக்கடியை கொடுத்து ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்துவைத்தவர் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரன் ஆவார். பொலிஸாரின் சுற்றிவளைப் பின்போது உயிருடன் பிடிபட்டால் விடுதலையின் ஆரம்பகட்ட வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதால் சயனைட் அருந்தி தன் உயிரை ஆனிமாதம் 05 ஆம் திகதி 1974ஆம் ஆண்டு தியாகம் செய்தார். இந்த நாளைத்தான் மாவீரர் தினமாக அறிவித்திருக்க வேண்டும். பின்னர் சிவகுமாரன் வழியைத்தான் பிரபாகரன் பின்பற்றினார். இந்த ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்ட வரலாறு எல்லாம் சீமானுக்கு தெரிந்திருக்காது. காரணம் சீமான் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது "எம்.ஜிஆர் அவர்கள் நம்ம தலைவர் பிரபாகரனுக்கு உதவியிருக்கிறாராம் என்பது எனக்கு இப்பதான் தெரிஞ்சுது அதனால எம்.ஜிஆர் மீது எனக்கு ஒரு மதிப்பு வந்திடுச்சு" என்றார்.

பொன்னுத்துரை சிவகுமாரனின் மரணமும் வரலாறு காணாத ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட மரணஊர்வலமும் தான் தமிழர்களையும் இளைஞர்களையும் கண்திறக்கவைத்து போராட்டத்தின்பக்கம் இழுத்தது. பொன்னுத்துரை சிவகுமாரன்தான் விடுதலைக்கு வித்திட்டு வீரமரணம் அடைந்த முதல்போராளி என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்படியாக ஆயிரக்கணக்கான போராளிகள் வருடத்தில் உள்ள ஒவ்வொருநாளும் இறந்திருக்கின்றார்கள். இறந்த அந்த நாளைத்தான் அவர்களுக்கு வேண்டியவர்கள் நினைவுகூருகின்றார்கள். சீமானின் கார்த்திகைமாதம் முழுவதும் மாவீரர்நாள் என்பதை கனடாவாழ் தமிழர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். விளம்பரத்திற்காகவும் தனது கட்சியை வளர்க்கவும் பணத்தைப் பெருக்கவும் தமிழகத்தில் எங்கேயோ ஒரு மூலையில் இருந்துகொண்டு ஜனநாயக நாடான கனடாவில் உள்ள தமிழர்களை கட்டுப்படுத்தவும் கட்டளைபிறப்பிக்கவும் முடியாது. கனடாவில் ஒரு சில விரல்விட்டு எண்ணக்கூடிய சீமானின் சீடர்கள் வேண்டுமானால் சீமானின் கட்டளைகளை ஏற்று நடவுங்கள்.

இளையராஜா அல்ல எந்த ராஜா வந்தாலும் வரவேற்பதும் வரவேற்காததும் கனேடியத்தமிழர்களின் உரிமை அதை யாரும் தடுக்கமுடியாது. அமைதியான கனடா நாட்டில் உங்கள் வியாபார விளம்பர போட்டிகளுக்காக ஈழத்தமிழர்களின் அரசியலையோ போராட்டத்தையோ உங்கள் தேவைக்கு ஏற்றமாதிரி பயன்படுத்தாதீர்கள். ஒவ்வொரு ஈழத்தமிழனும் போரின்வலியை அனுபவித்திருக்கின்றான். நீங்கள் அந்த வலியை அனுபவிக்கவில்லை. உயிரையும் இழந்தோம் உடமையையும் இழந்தோம் உடன்பிறப்புக்களையும் இழந்தோம் கலாசாரத்தையும் இழந்தோம் உலகம் எல்லாம் சிதறி மொழியையும் இழந்தோம்... இனிமேல் இழப்பதற்கு எதுவுமே இல்லை எங்களை விட்டுவிடுங்கள்.

**- லியோ ஸ்காபுறோ கனடா -**

# சினிமா சினிமா



✦ எஸ்.ஜே.சூர்யா இரண்டு படங்களை இயக்கினார். வாலி, குஷி இரண்டுமே பெரு வெற்றி பெற்றன. அடுத்து தானே நடித்து இயக்கினார். அவை வெற்றியளிக்க வில்லை. பின்னர் பிறர் இயக் கத்தில் நடித்தார். சரிவரவில்லை. சிறிதுகாலம் காணாமல் போயிருந்தார். இப்போது தானே நடித்து, இசையும் அமைத்து, இயக்கும் "இசை" என்ற படத்தோடு வந்திருக்கிறார். கதாநாயகி புதுமுகம், சாவித்ரி. பத்திரிகைகளில் வெளியான இவரது புகைப்படங்களைப் பார்த்து பல இயக்குநர்கள் அழைத்திருக்கிறார்கள். ஆனால் "இசை" வெளியாகும் வரை வேறு படங்களில் நடிக்கக் கூடாது என்பது எஸ்.ஜே.சூர்யா போட்டிருக்கும் ஒப்பந்தமாம்.

✦ மலையாள இயக்குநர் மஜீத் இயக்கவுள்ள "எஸ், ஐ ஆம்" என்ற மலையாளப் படத்தில் நடிக்க ப்ரியாமணிக்கு அழைப்பு வந்துள்ளது. கதையைக் கேட்ட ப்ரியாமணி, "முழு ஸ்கிரிப்ட்டையும் கொடுங்கள் படித்துப் பார்த்துவிட்டு முடிவை சொல்கிறேன் அதுவரை வேறு எந்த நடிகையையும் ஒப்பந்தம் செய்துவிடாதீர்கள்" என்று கூறியிருக்கிறார். தான் ஆண் என்பதை சமூகத்துக்கு மறைத்துவிட்டு பெண் போல வாழ்ந்து வரும் ஒரு கிளப் டான்சர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றியதுதான் - ப்ரியாமணியைக் கவர்ந்த அந்தக் க்தை.

✦ நடிகை ராதாவின் இரண்டாவது மகள் துளசி மணிரத்தினத்தின் "கடல்" படத்தில் நடித்து வருகிறார். அந்தப் படம் வெளிவருவதற்கு முன்பே இரண்டு புதிய படங்களிலும் ஒப்பந்தமாகியுள்ளார். ராதாவின் மூத்த மகளான நடிகை கார்த்திகாவிடம் "உங்கள் தங்கை உங்களுக்குப் போட்டியா?" என்று கேட்டால்... "என் அம்மாவும், அவரது சகோதரி அம்பிகாவும் திரையுலகில் கொடிகட்டிப்



கார்த்திகா



துளசி

பறக்கவில்லையா? அவர்களுக்குள் என்றாவது போட்டி, பொறாமை இருந்ததா? அதுபோல் நானும் துளசியும் சாதனை சகோதரிகளாகத் திகழ்வோம்" என்கிறார்.

✦ இயக்குநர் ஷங்கரின் எஸ் பிக்சர்ஸும் தொழிலதிபர் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனமும் இணைந்து படத் தயாரிப்பில் ஈடுபட பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

✦ புகைப்பட கலைஞராக பிரபல பத்திரிகைகளுக்கு தான் எடுத்த புகைப்படங்களை இன்னும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார் இயக்குநரும், ஒளிப்பதிவாளருமான கே.வி.ஆனந்த். அவ்வப்போது ஒவ்வொரு புகைப்படமாக எடுத்துக் காட்டி அப்புகைப்படம் எடுக்கும் போது நேர்ந்த சம்பவங்களை ஆர்வமாக விவரிக்கிறார்.

✦ கறுப்பு வெள்ளை, வண்ணப் படம், 3 டி (சிவாஜி), மோஷன் கப்சர் அனிமேஷன் பிக்சர் (கோச்சடையான்) என நான்கு விதமான தொழில்நுட்ப மாற்றங்களில் உருவான படங்களில் நடித்துள்ள முதல் இந்திய நடிகர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் ரஜினிகாந்த்.



# சோறு

உலகில் தினமும், 30 ஆயிரம் குழந்தைகள் பட்டினியால் இறக்கின்றனர் என்று ஒரு சர்வதேச கணக்கெடுப்பு, சொல்கிறது. அதே நேரம், உலகில் வீணாகும் உணவுப்பொருட்களை சேகரித்தால், எத்தனையோ லட்சம் பேர் சாப்பிடலாம் என்றும் கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. அநேக வீடுகளில், மிஞ்சிய உணவை குப்பையில் கொட்டுவதைக் காண்கிறோம். இதெல்லாம் கூடாதென்று தான், அந்தக் காலத்திலேயே உணவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், 'அன்னம் பரபிரம்மம்" என்றனர். 'உணவு தான் தெய்வம்" என்று கூறினர். அரிசிக்குள், அன்னபூரணி சிலையை போட்டு வைத்தனர். கோவிலில் கும்பாபிஷேகம் நடக்கும் முன், சிலைகளை, 'தானியவாசம்" என்ற பெயரில், தானியங்களில் கிடத்தி வைத்தனர்.

கிராமங்களில், 'சோறு கண்ட இடம் சொர்க்கம்" என்று சொல்வதுண்டு. ஒரு வீட்டில் விருந்தினர் ஒருவர் நீண்ட நாள் தங்கிவிட்டால், அவரைக் கேலி செய்வதற்காக இதைப் பயன்படுத்துகின்றனர். உண்மையில்,

— கருணாகரன் —

# முருகபூபதி: புலம்பெயர் தமிழர்களில் ஒரு முன்னுதாரணம்!



முருகபூபதிக்கும் எல்லோரையும் போல இரண்டு கண்களே உள்ளன. ஒன்று இலக்கியமும் எழுத்தும். மற்றது உதவிப் பணியும் பின்தங்கிய நிலையிலிருப்போருக்கான தொண்டும்.

இந்த இரண்டாவது கண் விசயத்தில் பூபதி படைப்பாளிகளிடத்தில் ஒரு முன்னோடியே. வேறு சில படைப்பாளிகள் பூபதியைப் போலப் பொதுப்பணிகளைச் செய்து வந்தாலும் அவை ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட விதத்தில் தொடர்ச்சியைக் கொண்டவையல்ல. நடேசன் பூபதியின் வழியில் "வானவில்" என்றொரு உதவித்திட்டத்தை இப்போது ஆரம்பித்து நடத்தி வருகிறார். சாந்தி ரமேஸ் "நேசக்கரம்" அமைப்பின் மூலமாக உதவி வருகிறார். சஞ்சயன் செல்வமாணிக்கம் பலரையும் உதவிக்கு தூண்டி அவர்களை நன்செய் பரப்பில் ஈடுபடுத்துகிறார். இதைவிட தாமரைச்செல்வி, தமிழ்ப்பிரியா என இன்னும் சிலர் உதவிப்பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இப்படி இன்னும் சிலர் உண்டு.

முருகபூபதி கடந்த இருபது ஆண்டுக்கும் மேலாக தன்னோடு வேறு பல நண்பர்களையும் இணைத்துக்கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வறிய மாணவர்களுடைய கல்விக்காக உதவி வருகிறார். இதில் ஏறக்குறைய 600 க்கும் மேலான மாணவர்கள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பயன்பெறுகிறார்கள்.

இலங்கையில் பிறந்து, அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் முருகபூபதிக்கு உலகமெங்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். நட்பின் ஊடாக அந்த நண்பர்களையும் தன்னுடைய பொது வெளியை நோக்கி, அந்தப் பொது வெளியின் செயற்களத்தை நோக்கி, பணிப் பிராரந்தியத்தை நோக்கி அழைத்து வருகிறார்.

முருகபூபதியினால் அப்படிப் பொது வெளிக்கும் பொதுச் செயற்களத்துக்கும் அழைத்து வரப்பட்ட பல நண்பர்களின் பங்களிப்பு இன்று இலங்கையில் பாதிக்கப்பட்ட பலருடைய வாழ்க்கைக்கு உதவியாக இருக்கிறது. குறிப்பாக போர்க்காலத்தில் பாதிக்கப் பட்ட வடக்கு கிழக்குப் பகுதி மக்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் பூபதியின் அக்கறைகளும் செயற்பாடுகளும் பெரும் பயன். நன்கு ஒழுங்கமைப்பட்ட திட்டமிடலில் இந்த உதவிகளும் உதவிகளின் மூலமான விருத்தியும் நடைபெறுகின்றன.


யாழ்ப்பாணம் கொக்குவிலிலும் திருகோணமலை யிலும் இப்படி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான உதவி மையங்கள் இயங்குகின்றன. கொக்குவிலில் இயங்குகின்ற மையத்துக்கு நான் போயிருக்கிறேன். சிறுவர் அபிவிருத்திக்கான நிலையம் என்ற பெயரில் அது இயங்குகிறது. (இப்பொழுது யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் அதை இடம் மாற்றியிருக்கிறார்கள்). அங்கே எந்தப் பிரமாண்ட மான நிர்வாக நடவடிக்கைகளும் கிடையாது. அதிக வளங்களைக் குவித்து நேரத்தையும் வளங்களையும் வீணடிக்கும் தன்மை இல்லை. மிக மட்டான, அடிப்படை வசதிகளே குறைந்த நிலையில் அந்த உதவி மையம் இயங்குகின்றது. இரண்டு பணியாளர்களும் ஒரு கணனியும் ஒரு நிர்வாகியும் மட்டுமே அங்கே உண்டு. வழமையான, தொண்டு நிறுவனங்களின் நிர்வாக அமைப்பின் செழிப்பை அங்கே காண முடியவில்லை. அங்கே இருக்கின்ற பாலதயானந்தன் என்பவர், தன்னைப் போல அந்த அலுவலகத்தையும் அமைதியாகவும் எளிமையாகவும் நல்ல முறையிலும் நிர்வகிக்கிறார்.

வெளியாரின் அல்லது புலம்பெயர்ந்த மக்களின் நிதிப் பங்களிப்பில் அல்லது அவர்கள்ுடைய உதவி யில் இயங்குகின்ற எந்த அமைப்பும் அல்லது நிறுவனமும் இப்படி மட்டுமட்டான வளங்களுடன் இருப்பதில்லை. அவற்றில் ஒரு மினுக்கமும் ஆடம்பரத்தன்மையும் இருக்கும். டொலர் ரூபாயாக ஆகும்போது ஏற்படுகின்ற மினுக்கம் அது. அல்லது பிராங்கோ மார்க்கோ நொஸ்க்கோ ரூபாயாகும்போது உருவாகின்ற வீக்கம். ஆனால், முருகபூபதியாலும் மற்றும் நண்பர்களாலும் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் இந்த அமைப்பு இதற்கு மாறாகவே இருக்கிறது. காசை வீணாக்காத கரிசனை. கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை பெறுமதி யாகச் செலவழிக்க வேணும் என்ற அக்கறை. அந்தச் செலவு உண்மையில் செலவே அல்ல. அது எதிர்கால மனிதர்களுக்கான பயன் என்ற புரிதலுடன் செய்யப்படும் எளிமையான முதலீடு.

இப்பொழுது இந்த அமைப்பு தன்னுடைய சேவைப் பரப்பையும் ஆழத்தையும் மேலும் விரிவாக்கவே சிந்திக்கிறது. அதற்கே முனைகிறது. புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற நண்பர்களை எப்படியோ ஒருங்கிணைத்து போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுடைய கல்விக்கு உதவும் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பொதுத்துறை சார்ந்தவர்களை இணைத்து தங்களுடைய சேவையை ஆற்றிவருகின்றனர் இந்த அமைப்பினர்.

## கண்களைக் காக்க...



❖ ஓடும் வண்டியில் படிப்பதைத் தவிர்க்கவும்.

❖ நிமிர்ந்து நேராக அமர்ந்து கொண்டுதான் படிக்க வேண்டும்.

❖ படிக்கும்போது இடப்புறமிருந்து வெளிச்சம் வர வேண்டும்.

❖ 20 நிமிடங்களுக்கு ஒருமுறை ஜன்னலுக்கு வெளியாக பார்வையைச் செலுத்திவிட்டு பின்பு படிக்க வேண்டும்.

❖ தொலைக்காட்சி பார்க்கும்போது... டி.வி.க்கு 5 அடி தூரத்தில் அமர்ந்து பார்க்க வேண்டும்.

❖ முகவாய்கட்டையை சற்றே உயர்த்தி மேல் இமைகள் கீழ் இருக்கும்படி வைத்து டி.வி. பார்க்க வேண்டும்.

❖ கணனியைப் பயன்படுத்துவோர் 20 நிமிடங்களுக்கு ஒருமுறை பார்வையைத் திரையில் இருந்து வேறு பக்கமாகத் திருப்ப வேண்டும்.

❖ கணனியில் தொடர்ந்து வேலை பார்ப்பவர்கள் மணிக்கொரு தரம் எழுந்து சிறுநீர் கழித்துவிட்டு, தண்ணீர் பருக வேண்டும். தூரத்தில் உள்ள பொருள்களை பார்த்துவிட்டு வந்து கணனியைப் பார்க்க வேண்டும்.

❖ கணனியில் வேலை பார்ப்பவர்கள் இரவில் அதிக நேரம் க்ண்விழிக்கக்கூடாது.

## பேராசை பெருநஷ்டம்!

நடேசன் ஒரு பேராசைக்காரன். ஊர் மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்து வந்தான்.

ஒருநாள் அவன் வசிக்கும் பகுதிக்கு ஒரு துறவி வந்தார்.

அவரைச் சந்தித்த நடேசன், "எனக்கு இன்னும் அதிகமாகப் பணம் வேண்டும்... அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"நீ உனது வீட்டுக்கு வரும் பிச்சைக்காரனுக்குத் தினமும் பிச்சை போட ணும்... நீ எவ்வளவு கொடுக்கிறாயோ, அது இரட்டிப்பாகி, என் அருகே இருக்கும் இந்த மந்திரப் பையில் இருக்கும்! நீ தினமும் மாலையில் வந்து அதைப் பெற்றுக் கொள்ளலாம்..." என்றார்.

நடேசனுக்கு வாயெல்லாம் பல்லாக இருந்தது.

'நாம் போடும் காசெல்லாம் இரட்டிப்பாகும் என்றால், எவ்வளவு பணம் கிடைக்கும்? ம்... நாம் ரொம்ப அதிர்ஷ்டசாலி' என்று எண்ணிக் கொண்டே வீட்டுக்குச் சென்றான்.

மறுநாள் காலையில், ஒரு பிச்சைக்காரன் வந்து வீட்டு வாசலில் நின்றான். அவனுக்கு 5 ரூபா கொடுத்தான் நடேசன். மாலையில் துறவியிடம் போனான். அவர் நீட்டிய மந்திரப் பைக்குள் பத்து ரூபா இருந்தது. அதை எடுத்துக் கொண்டு, தாங்க முடியாத மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான்.

இதே போல பல நாட்கள் சென்றன. தினமும் பிச்சைக்காரன் வந்தான். நடேசன் போடும் பணத்தின் மதிப்பு உயர்ந்துகொண்டே வந்தது. அதற்கு இரண்டு மடங்காக அவனுக்குத் திருப்பிக் கிடைத்தும் வந்தது.

ஒருநாள்... அதிகாலை நேரம்... துறவி அவனிடம் தான் அடுத்த நாள் வேறு ஊருக்குச் செல்லப் போவதாகக் கூறினார். நடேசனுக்கு வருத்தமாகப் போய்விட்டது. அவர் போய்விட்டால் பணம் பெருகுவது நின்று போய்விடுமே என்று எண்ணினான்.

அவர் போவதற்குள் முடிந்த அளவு மந்திரப் பை மூலம் பணம் திரட்டி விடவேண்டுமேன்று தீர்மானித்தான்.



தனது சொத்துக்களையெல்லாம் விற்று, அனைத்துப் பணத்தையும் காலையில் வந்த பிச்சைக்காரனுக்குப் போட்டான்.

மாலையில் துறவியின் இருப்பிடத்துக்குச் சென்றான். அங்கே துறவியும் இல்லை மந்திரப் பையும் இல்லை. ஒரு கடிதம் மட்டுமே இருந்தது.

"உன் சொத்து முழுவதையும் எனக்குத் தந்ததற்கு நன்றி! நீ புத்திசாலியாக இருந்திருந்தால், இதுவரை கிடைத்தது போதும் என்று நினைத்து சந்தோஷமாக இருந்திருப்பாய். உன் பேராசை உன் சொத்து முழுவதையும் இழக்கச் செய்துவிட்டது. இனிமேலாவது பேராசையின்றி புத்தியோடு பிழைத்துக் கொள்..." என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

நடேசன் அதிர்ந்து போனான்.

...வனுக்கு அன்னத்தை அபிஷேகம் ...வதைக் கண்டால், சொர்க்கம் கிடைக்கும் ... பொருளில் இது சொல்லப்பட்டது. ...ணவை வீணாக்குவதை தவிர்ப்பது ...மல்ல, உணவை அளவோடு சாப்பிடுவதன் ...ழும் அதை சேமிக்க வேண்டும் என்கிறது

## ...று கண்ட இடம் சொர்க்கம்

...ம். ஒரு துறவி, தினமும் எட்டு உருண்டை ...ாம்) சோறு தான் சாப்பிட வேண்டும். ...றத்தில் உள்ளவர்கள், இரண்டு வேளைக்கு, ...வளம் மட்டுமே சாப்பிட வேண்டும் என்கிறது. ...க் காலத்தில், இரவு சாப்பாடு என்ற ஒன்றே ...லை. அதனால் தான் அவர்கள் தீர்க்காயுளுடன் ...ந்தனர். 120 ஆண்டுகள் சர்வ சாதாரணமாக ...ந்ததால் தான், ஜோதிடத்தில் ஒருவருக்கு ...த்தி வகுத்தது கூட, 120 ஆண்டுகளுக்கு என ...தது. ...ரு ஸ்லோகத்தில், 'உணவை நீ அதிகமாக ...பிட்டால், அது உன்னைச் சாப்பிட்டு விடும்" என்று சொல்லியிருக்கிறது. அதனால் தான் டாக்டர்கள், 'அளவோடு சாப்பிடுங்கள்" என்று கூறுகின்றனர். நம் உயிரைக் காப்பது தெய்வம் என்கிறோம். அன்னமும் நம் உயிரைக் காப்பதால், அதையும் தெய்வமாக மதித்தனர்.

திருவள்ளுவர், உணவின் பெருமையை தம் வாழ்நாளிலேயே கடைபிடித்தவர். அவர் சாப்பிடும்போது, கீழே விழும் பருக்கையை, ஒரு ஊசியில் குத்தி எடுத்து, கிண்ணத்திலுள்ள தண்ணீரில் போட்டு விடுவார். பிறகு நீரை வடித்து விட்டு எடுத்துச் சாப்பிடுவார். இதுகுறித்து அவ்ரது மனைவி வாசுகி கேட்டதற்கு, 'உணவை வீணாக்கக் கூடாது. ஒவ்வொரு பருக்கையும், ஒருவனது உழைப்பு. அதே நேரம், தவறி விழுவது இயல்பு. அதை சுத்தப்படுத்தி சாப்பிடவே, தண்ணீருக்குள் போட்டு எடுத்தேன்..." என்றார்.

உணவின் பெருமையை உணர்ந்து, அதை வீணாக்குவதில்லை என்று உறுதியெடுங்கள். இனி, உங்கள் வீட்டிலிருந்து ஒரு பருக்கை கூட குப்பைத்தொட்டிக்கு போகக் கூடாது.

(அன்னாபிஷேகம் நூலில்)




A.J.Nimalrajan

# எம் பி 4 பைல்கள்

எம்பி 4 பைல் என்பது எம்பி3 பைலின் மேம்படுத்தப்பட்ட வடிவம் என்று நினைத்தால் அது தவறு. எம்பி 4 பைல் என்பது சுருக்கப்பட்ட வீடியோ பைலாகும். வீடியோ பைலின் ஒரிஜினல் அளவு மிகப் பெரியதாக இருக்கும் என்பதால் அதனைச் சுருக்கி எடுத்துச் சென்று பின் இயக்குகையில் விரித்து இயக்கும் வகையில் இந்த வடிவம் உருவாக்கப்படுகிறது.

எனவே சுருக்கமாக எம்பி3 என்பது ஓடியோ பைல் என்றும் எம்பி4 என்பது வீடியோ பைல் என்றும் நினைவில் கொள்ளலாம். எம்பி 4 என்பதை MPEG4 AVC என்றும் கூறுவார்கள். இதில் AVC என்பது advanced video coding என்பதன் சுருக்கமாகும்.

எம்பி4 பைல்கள் வீடியோ சம்பந்தப்பட்டது என்பதால் அவை எம் பி 3 மியூசிக் மற்றும் ஓடியோ பைல்களைக் காட்டிலும் சிறிது சிக்கலானவை. இருந்தாலும் சில சிறப்பு உத்திகளைப் பயன்படுத்தி அவை சுருக்கப்படுகின்றன. பல்வேறு நிலைகளில் இவை மேற்கொள்ளப்படுகின்றன. நகரும் காட்சிகள் மற்றும் வெவ்வேறான அலைவரிசைகள் என அனைத்தையும் இந்த சுருக்கு வேலைகளில் கையாள வேண்டியுள்ளது. பல நிலைகளில் இந்த பைல்களில் சுருக்கும் வேலையும் விரிக்கும் வேலையும் மேற் கொள்ளப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் codec என்று சொல்வார்கள்.

நீங்கள் எண்ணலாம்? எம்பி3 பிளேயர் என்று இருக்கையில் எம்பி4 பிளேயர் என்று ஏன் தனியாக இல்லை என்று. இந்த லேபல் தான் பிரபலமாகவில்லையே தவிர இத்தகைய பிளேயர்களும் இருக்கத் தான் செய்கின்றன. எலக்ட்ரோனிக் கடைகளில் கேட்டால் தருவார்கள். இதனை வாங்கி டிவி அல்லது கம்ப்யூட்டருடன் இணைத்து பயன்படுத்தலாம். எம்பி3 பிளேயரைப போல இதுவும் எளிதுதான்.


மற்ற தொழில் நுட்பங்களைப் போல எம்பி4 தொழில் நுட்பத்திலும் சில நிறைகள் மற்றும் குறைகள் உள்ளன. எம்பி4 மூலம் வீடியோ காட்சிகள் 1 Mbps வேகத்தில் காட்டப்படுகின்றன. இதற்கு உங்களிடம் ப்ரோட் பாண்ட் இணைப்பு இருக்க வேண்டும். எம்பி4 பிளேயர் இதே வேகத்தில் பதிந்த பைல்களை கம்ப்யூட்டருக்கும் டிவிக்கும் அனுப்புகிறது. எம்பி4 பிளேயரில் எம்பி3 பைல்களையும் இயக்கலாம். குறைகள் என எடுத்துக் கொண்டால் இதிலும் திருட்டுத்தனமாக நகல் எடுக்கும் வேலை எளிதாக மேற்கொள்ளப்படுகிறது. இன்டர்நெட்டில் கிடைக்கும் இன்றைய மூவிக்களே இதற்கு சாட்சி. இருந்தாலும் இதனைத் தடுக்க தொழில் நுட்பத்தைத் தொடர்ந்து வளப்படுத்தி வருகின்றனர்.

# mouse--->Keyboard ஆகுமா?

சில சமயங்களில் உங்கள் Keyboard இன் சில key வேலை செய்யவில்லை எனில், உடனடியாக எதாவது டைப் பண்ணும் வேலை இருந்தால் என்ன செய்வது?


அப்போதுதான் நாம் mouse ஐ பயன்படுத்திக்கொள்ள முடியும். இது மிகவும் இலகுவானது.

Start—> Run—> “osk “





அவ்வளவுதான் இப்போது கீழே வருவது போல Onscreen keyboard வரும். ஒரு word document ஐ ஓபன் செய்து உங்கள் விவரத்தை நீங்கள் டைப் செய்யலாம். dictionary உம் உள்ளது இதில். இதில் நீங்கள் கிளிக் செய்பவை உங்கள் word document இல் வந்து விடும்.





# கூகுளின் புத்தம் புதிய Calender




தன்னுடைய பயனாளர்களுக்கு புத்தம்புது வசதிகளை வழங்கிக் கொண்டிருக்கும் கூகுள் புதிதாக Calender Application-ஐ வெளியிட்டிருக்கிறது. இந்த Application-ஐ தனது பிரசித்தி பெற்ற Google Play Storeஇல் வெளியிட்டுள்ளது கூகுள் நிறுவனம். இந்த Calender Application-களில் சிறந்த பல வசதிகளை பெற முடியும். விசேஷமான நாட்களை காட்டும் இந்த நாள்காட்டி Application-களில் முக்கியமான நாட்களைக் குறித்துக் கொள்ளவும் முடியும்.

அதோடு இதில் Remainder வசதியினையும் பயன் படுத்த முடியும். இதன் மூலம் SMS அனுப்பும் வசதியினை யும் பெற முடியும். Notification வசதியினை கொடுக்கும் இந்த Calender Application-களில், Home Time Zone என்ற வசதியினையும் பெறலாம். இந்த மென்பொருளானது உங்கள் டெஸ்க்டொப்பில் ஒரு சிறிய குளிர்கால மாய உணர்வினை கொடுக்கும் சரியான நிரலாக இருக்கிறது.



டெஸ்க்டொப் ஸ்னோ ஓகே மென்பொருளானது உங்கள் விண்டோஸ் டெஸ்க்டொப்பில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட பனிப் பொழிவு செதில்களை உருவாக்கும் கனமற்ற கையடக்க விண்டோஸ் நிரல் இருக்கிறது.


# பாடல்களை கட் செய்ய - Mp3 Cutter

செல்போனில் அனைவருக்கும் புதுப் புது பாடல்களை அழைப்பு ஒலியாக வைக்க விரும்புவோம். இதற்காக பாடல்களை இணையத்தில் தேடிப்பிடித்து தரவிறக்கம் செய்து பயன்படுத்துவோம். எல்லாப் பாடல்களும் கிடைத்து விடாது. ஒரு சில பாடல்கள் முழுபாடல்களாக மட்டுமே கிடைக்கும், அதுபோன்ற பாடல்களை தனியே கட் செய்து நமக்கு வேண்டிய பகுதியை மட்டும் பயன்படுத்தி கொள்வதற்கு இணையத்தில் பல்வேறு இலவச மென்பொருள் கிடைகின்றன. அந்த வகையில் நமக்கு உதவி செய்யும் மென்



பொருள்தான் MP3 Cutter.

MP3 Cutter மென்பொருளை பதிவிறக்கி நிறுவிய பின் கணனியை மறுதொடக்கம் செய்து கொள்ளவும். பின் இந்த MP3 Cutter மென்பொருளை ஓப்பன் செய்யவும். பின் எந்தப் பாடலை கட் செய்ய வேண்டுமோ அதை File வழியாக சென்று ஓப்பன் செய்யவும். பின் உங்களுடைய பாடலானது அப்லோட் செய்யப்பட்டு மென்பொருளில் ஓப்பன் ஆகும்.



பின் வேண்டிய பகுதியை தேர்வு செய்து கட் செய்து கொள்ளவும். பின் நீங்கள் கட் செய்த பாடலைச் சேமித்து கொள்ளவும். அவ்வளவுதான் இனி நீங்கள் விரும்பிய பாடலில் எந்தப் பகுதியை வேண்டுமானலும் அழைப்பு ஒலியாக மட்டுமல்ல நீங்கள் விரும்பும் பாடலாகவும் வைத்துக்கொள்ள முடியும். இந்த மென்பொருள் பாடல்களை கட் செய்ய அருமையான மென்பொருள் ஆகும்.

# ஆடைகளை நீக்கி காட்டும் விபரீத மொபைல் மென்பொருள் - பெண்களே உஷார்!



ஐ-போனில் தகவல் தொழில் நுட்பத்தின் அபார வளர்ச்சியின் காரணமாக இன்று மனித சமுதாயம் பல அரிய கண்டுபிடிப்புகளை கண்டு பிடித்துள்ளது. அத்தோடு விபரீதங்களும் கூடவே வருகின்றன.

தகவல் தொழில் நுட்பத்தின் மூலமாக நாம் பெறும் நன்மைகள் பல என்றாலும், அதன் மூலம் வரும் பிரச்சினைகளும் கூடிக் கொண்டேதான் போகிறது. அந்த வகையில் இப்போது வந்துள்ள மென்பொருளால் ஏற்படப்போகும் விபரீத விளைவுகள் ஏராளம் என்றே சொல்லலாம். அதுவும் பெண்கள் இணைய வெளியை நினைத்தாலே அச்சப் படுவதற்குரிய நிலை தோன்றியிருக்கிறது.

ஐபோன் கமெராவில் இந்த மென்பொருளை நிறுவி விட்டால், அதன் மூலம் சாதாரண ஆடை அணிந்து வருபவர்களைக் கூட ஆடைகளை நீக்கி நிர்வாணமாகக் காட்டுகிறது.

இது ஐபோன் செய்து கொடுத்துள்ள வசதி அல்ல. இதுவொரு பிரத்தியேக மென்பொருள். இதை தனியாக வாங்கி ஐபோன் வைத்திருப்பவர்கள் பாவித்துக்கொள்ள முடியும். பெண்களே! நீங்கள் சற்று எச்சரிக்கையுடன் இருந்தாக வேண்டியுள ளது.

நீங்கள் அனைவரும் SKYPE பயன் படுத்துவீர்கள். அதில் பல நண்பர் களுடன் உரையாடுவீர்கள். வெளி நாடுகளில் உள்ளவர்கள்

. நீங்கள் VIDEO CHAT அடிப்பதை இலவசமாக RECORD செய்து கொள்ளுங்கள்.

# skype வீடியோ கோலிங்கை Record செய்ய

பெரும்பாலும் தங்கள் உறவினர்களுடன் முகம் பார்த்து பேசி மகிழவும், போகமுடியாத திருமண நிகழ்வுகள் வேறுபல நிகழ்வுகளை காணவும் SKYPE பயன்படுத்துகின்றனர். இவற்றில் சிலவற்றை பத்திரப்படுத்தி வைக்க விரும்புவர்.

அப்படி விரும்புவோர் முதலில் உங்கள் கணனியில் SKYPEI இன்ஸ்டோல் செய்யவும். பின்பு SKYPE VIDEO CALL RECORDER VODBURNER மென்பொருளை இன்ஸ்டோல் செய்து கொண்டு உங்கள் நண்பர்களுடன்



# மீள்குடியமர்ந்தோருக்கான வீட்டுத்திட்டம்; பாகுபாடு காட்டப்படுவதாக விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத்திட்டத்தில் பாடுபாடுகள் காட்டப்படுவதால் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள், தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, மத்தி, தெற்கு ஆகிய 6 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடிய மர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படுவதாகவும் குறிப்பாக எழு எட்டுப்பேர் உள்ள குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படும் நிலையில் உறவுகளை இழந்து தாய் தந்தையை இழந்து தனியாகவோ சகோதரர்களுடன் வாழும் இரண்டு மூன்று பேருக்கும் மற்றும் கணவனை இழந்து பிள்ளைகளுடன் தனித்து வாழும் மனைவிக்கும் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும குடும்பங்களுக்கும் வீட்டுத் திட்டங்கள் கிடைப்பதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து பின்தங்கிய நிலையில் வாழும் தமக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாமையாலும் தற்காலிக வீடுகள் இன்றியும் தாம் வெகுவாக கஷ்டங்களை அனுபவிப்பதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

தமக்கும் வீட்டுத்திட்டம் வழங்கப்படவேண்டும் என உரிய தரப்பினருக்கு பலமுறை கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

எனவே கஷ்டப்பட்டு வாழ்ந்து வரும் எமக்கும் வீட்டுத்திட்டத்தை வழங்க அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவவேண்டும் என இக்கிராம மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர். (04)

## பாடசாலையில் வெள்ளம்; மாணவர் வரவு வீழ்ச்சி

(பருத்தித்துறை)

அண்மையில் பெய்த கன மழையினால் வடமராட்சி கற்கோவளம் புனித நகர்ப்பகுதியில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதால் போக்கு வரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள நாகர்கோயில் அ.மி.த.க. பாடசாலை வெள்ளக்காடாக காட்சியளிப்பதுடன் பாடசாலைககுச் செல்லும் வீதியிலும் வெள்ள நீர் தேங்கிக்காணப்படுவதால் பாடசாலைக்கும் வரும் மாணவர்களின் வரவு மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (109)

## பாரிய பள்ளத்தால் சிரமத்தில் பயணங்கள்

(குருநகர்)

காங்கேசன்துறை வீதி- தட்டா தெருச் சந்தியில் காணப்பட்ட வெள்ளத்துக்கு கொங்கிறீற் கலவை போட்டு நிரவப்பட்டுள்ளது.

அதேவேளை சிவன்கோவில் வடக்கு வீதிச் சந்தியில் சேதமடைந்துள்ள மதகுப் பகுதியில் பாரிய பள்ளங்கள் தோன்றியுள்ளன.

அப்பகுதியைக் கடந்து செல்வதற்கு வாகனங்கள் மற்றும் மக்கள் தினமும் பெருஞ் சிரமப் பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (68)

## தெருவெளி நாடக ஆற்றுகை



(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 'வாசிப்பால் நாம் உயர்வோம்' என்னும் தெருவெளி நாடக ஆற்றுகை இடம்பெற்று வருகின்றது. வாசிப்பின் அவசியத்தினை இளம் சமுதாயத்தினரிடையே பரப்புகின்ற நோக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத் ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கை இணுவில் பொது நூலக கலைஞர்களுடன் புத்தாக்க இரங்க இயக்கக் (ஐ.ரி.எம்.) கலைஞர்களும் இணைந்து இத் தெருவெளி ஆற்றுகையை நிகழ்த்தி வருகின்றனர்.

இத் தெருவெளி நாடக ஆற்றுகையானது இணுவில் பிரதேச பொது இடங்கள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் ஆகிய இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. இத்தெருவெளி ஆற்றுகையினை பாடசாலைகள் பொது இடங்கள் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் ஆற்றுகை செய்ய விரும்புவோர் இணுவில் பொது நூலகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு இணுவில் பொது நூலகத்தினர் அறிவித்துள்ளனர்.



காரைநகர் -வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத்தினால் 2013ஆம் ஆண்டு நாட்காட்டி வெளியீட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் முதல் நாட்காட்டி பிரதியை ஆலய நிர்வாகி சிவஞானம் தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினத்திடம் வழங்குவதையும், ஆலயத்தினால் நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு ஆசிரியர் பாலசண்முகம் பரிசில் வழங்குவதையும் காணலாம். (50)

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ்ப்படங்கள் அடிப்படையில் நாடகபாணிச் சித்திரங்களாகவே ஏற்றுக்கொண்டால் கூட "மகாதேவி" பார்ப்போரை உலுக்கிவிடக் கூடிய திரைப்படம். சாவித்திரியின் ஆற்றல், உலகின் எந்த மொழிக் கதாநாயகி நட்சத்திரங்களின் சிறப்புக்கும் குறைந்ததல்ல. அவர் காலத்தையும், அன்றைய சமூக அமைப்பையும், மதிப்பீடுகளையும் நினைத்துப் பார்க்கும்போது அவர் சாதனை ஒரு மேதைக்கே உரியது.

– அசோகமித்திரன்

தான் தோன்றும் காட்சி மின்னல் அடித்த மாதிரியாகவும், புதுமையாகவும் இருக்க வேண்டுமென்று தன்னை மிகவும் வருத்திக் கொள்வார். ரசிகர்களின் கவனத்தையெல்லாம் மொத்தமாகத் தான் மட்டுமே ஈர்த்துக்கொண்டு, அரங்கத்திலிருக்கும் அத்தனை பார்வையாளர்களையும் சுருட்டித் தன் பாக்கெட்டிலே போட்டுக்கொள்ளும் அற்புதத் திறன் படைத்த ஓர் அபூர்வக் கலைஞர் நாகேஷ்.

– கே.பாலச்சந்தர்

எனக்கு என்னைவிடப் பெரிய எதிரி யாருமே இல்லை. திடீர்னு 'மருதநாயகம்' ஆரம்பிக்கிறேன்னா, 'டே உனக்கேண்டா இந்த வேலை எல்லாம்'னு எதிர்ப்புத் தெரிவிக்கறவன் எனக்குள்ளேயேதான் இருக்கிறான். அப்புறம் உட்கார்ந்து ஒரு மணி நேரம் பேசி அவனை கன்வின்ஸ் பண்ணிட்டுத்தான் நான் வேலையை ஆரம்பிப்பேன். அவன் நினைச்சதெல்லாம் சினிமால ஒரு பெரிய டைரக்டராகணும்கிறதுதான். நான் ஒரு நடிகன் ஆனதே கூட அவனுக்குப் பெரிய ஆச்சரியம்தான்.


– கமலஹாசன்

எம்.பி. சீனிவாசன் எழுபது எண்பதுகளில் மலையாள சினிமாவில் முக்கியமானவராகத் திகழ்ந்தார். அருமையான இசையமைப்பாளர். தமிழில் பரீட்சார்த்தமாக கம்யூனிஸ்ட்கள் முயற்சிசெய்த 'பாதை தெரியுது பார்' படத்துக்கு இசை அமைத்தது அவர்தான். தமிழ்நாடு அவரைப் புரிந்து கொள்ளத் தவறியது. ஆனால் மலையாளத்தில் அடூர், அரவிந்தன், எம்.டி. வாசுதேவன் நாயர் போன்றவர்கள் இவரை ஆதரித்தார்கள். உள்ளும் புறமும் கம்யூனிஸ்டாக வாழ்ந்த அருமையான மனிதர். சினிமாவில் இவருடன் சேர்ந்து ஒரு படம் (ஊமை ஜனங்கள்) நான் பணியாற்றி இருக்கிறேன். கம்யூனிஸ்ட் மாணவர் இயக்கப் பணிகளில் எம்.பி.எஸ். இந்தியா முழுக்கச் சுற்றி அலைந்தபோது, இதே போன்ற பணியைச் செய்துவந்த சகிதாவைச் சந்திக்க நேர்ந்தது. காதல் திருமணம் செய்துகொண்டார்கள். சகிதா முஸ்லீம். எம்.பி.எஸ். வைஷ்ணவ பிராமணர் (பிறப்பால் மட்டும்). சகிதா, டாக்டர் சைபுதீன் கிச்சலுவின் மகள். 1919இல் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்த அந்தப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் இவர்தான்.

எம்.பி.எஸ். நவீன எழுத்தாளர் பலரையும் தொடர்ந்து படிப்பார். அவ்ரை நான் சந்திக்கும் முன்பே, என் கதைகளை தாமரையில் படித்துவிட்டுப் பல பேட்டிகளில் என்னைச் சொல்லி இருந்தார். அவரை நான் எண்பதுகளின் தொடக்கப் பகுதியில்தான் சந்தித்தேன். சினிமாப் பின்னணி இசைக் கலைஞர்கள், பாடல் பதிவுக்குப் பிறகு சம்பளம் பெற நடையாக நடப்பார்கள். இதற்கென சினிமா இசைக் கலைஞர்கள் சங்கம் நிறுவியவர் 'அவர். இன்று சினிமா உலகில் மிகவும் பலம் பொருந்திய சங்கமே இந்தச் சங்கம்தான். இதற்காகவே தமிழ் சினிமா முதலாளிகள் இவரைப் புறக்கணித்தார்கள். 'சேர்ந்திசை' என்ற இயக்கத்தைத் தொடங்கி, நகர சபைப் பள்ளிக் குழந்தைகளைக் கொண்டு அற்புதமான இசை நிகழ்ச்சிகள் வழங்கினார். இது தொடர்பாக 'சேரிக் குழந்தைகள் சங்கீதம் பாடுவதாவது' என்று எழுதிய பத்திரிகைக் குறிப்பையும் நான் அறிவேன். நிகழ்ச்சி மிகப் பெரும் பாராட்டைப் பெற்றது. பல்லாயிரம் மக்கள் கண்டு கேட்டுக் களித்தார்கள். இசை மட்டுமல்ல, சகல சிருஷ்டி கரமும் எல்லா மனிதர்களிடமும் இருக்கவே செய்கிறது. கண்டுணர்ந்து, வளர்ப்பார் இல்லை. சீனிவாசன், இசையை மக்களிடம் கொண்டுசென்றார். பல வேளைகளில், அவரது காரில் எங்காவது நிறுத்தச் சொல்லிவிட்டு மது அருந்தி இருக்கிறோம். தினத்தந்தி தலைப்புச் செய்தியைச் சகானாவில், காம்போதியில் அல்லது ஏதாவது ஒரு அபூர்வ ராகத்தில் மெட்டமைத்துப் பாடுவார். என் சென்னை வாழ்க்கையில் நான் மறக்க முடியாத மனிதர்களில் அவர் முதல்வர்.

– பிரபஞ்சன்

# கேப்பாப்புலவு மக்களுக்கு நிரந்தர வீட்டுக்கு அடிக்கல்



(படம்:யூட்நிமலன்)

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நேற்று முன்தினம் விஜயம் செய்து கேப்பாப்புலவு மக்களுக்கான நிரந்தர வீட்டுத் திட்டத்திற்கு அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கோப்பாப்புலவிற்கு நேற்று முன்தினம் மதியம் 12.50 மணிக்கு இவர் விஜயம் செய்தார். முதற்கட்டமாக 50 நிரந்தர வீடுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்ததுடன் "கோப்புலவு மாதிரிக் கிராமம்" என்ற பெயர்ப்பலகையினையும் திறந்து வைத்தார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் கால் ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டு மூன்று இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியிலான நிரந்தர வீடுகள் கட்டப்படவுள்ளன. இந்த வீட்டுத் திட்டம் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் பூர்தியாக்கப்படவுள்ளது.

மேலும் 115 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்குள் கட்டித்தரப்படும் என உறுதியளித்துள்ளார்.

165 குடும்பங்களுக்கான வீட்டு அனுமதிப்பத்திரங்களையும் கையளித்துள்ளார். இதே வேளை கடந்த மாதம் ஆனந்தபுரம் பகுதியில் காணியில் இருந்த வெடிகுண்டில் சிக்குண்டு உயிரிழந்த ஜோசப் நீக்கிலர் நிசாந்தினி (வயது 10) யின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபா காசோலையி னையும் மரணச் செலவுக்கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாவையும் இந்நிகழ்வில் வைத்து குடும்பத்தினரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் முல்லை அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டலைத்தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க், ஜனாதிபதியின் முல்லைத்தீவு இணைப்பாளர் சதாசிவம் கனகரத்தினம், வலயக்கல்விப்பணிப்பாளர் மா. இராஜகுமார், கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பொ. குகநாதன், முல்லை பொலிஸ் அத்தியட்சகர் ஜனக குணதிலக உட்பட பல அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (04)

# பொலிஸ், இராணுவத்தினரால் 148 பைந் இரத்தம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நடமாடும் சேவையின் போது பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கு 148 பைந் இரத்தம் தானமாக வழங்கியுள்ளனர் என யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பொலிஸ் நடமாடும் சேவை கடந்த வாரம் டொன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது. இதன் போது பொதுமக்கள் சிலரும் இந்த இரத்ததான முகாமில் இரத்தம் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் யாழ். விஷேட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே பிரதிப் பொலிஸ மா அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த நடமாடும் சேவையில் பொது மக்களில் பார்வை குன் றியவர்களுக்கு 500 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வாறு யாழ். பொலிஸ் பிரிவுகள் தோறும் நடாத்தப்படும் பொலிஸ் நடமாடும் சேவையின் போது பொது மக்களுக்கான பொலிஸாரின் அனைத்து சேவைகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

# சிறுகுளங்களைப் புனரமைப்பது அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் அல்ல

## அனர்த்த முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 900 குளங்கள் இருந்தாலும் அவற்றை புனரமைப்பது அனர்த்த முகாமைத்துவத்திணைக்களத்தின் செயற்பாடு அல்ல. வெள்ளப் பெருக்கின் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சில குளங்களின் புனரமைப்பு மட்டுமே எமது திணைக்களத்தின் கீழ் வருகிறது என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி 900 குளங்கள் யாழ். மாவட்டத்தில் இருக்கின்றன. அவற்றை ஏன் புனரமைப்பு செய்யவில்லை. அவற்றை செய்தால் வெள்ளத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கலாம்தானே என விளக்கமற்ற நகைப்புக்கிடமான கேள்விகளை கேட்டவண்ணமிருந்தார். ஏதாவது கேட்க வேண்டுமே என்பதற்காக கேட்கப்பட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் பதிலளித்தார்.

அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் செயற்திட்ட படங்கள் திரைகளில் காண்பிக்கப்பட்ட போதும் படங்கள் தெளிவில்லை என்றும் விளக்கமாக வழங்கப் பட வில்லை என்றும் விநாயகமூர்த்தி காரசாரமான தொனியில கூட்டத்தில் தெரிவித்தார். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் ஏதாவது ஒரு கேள்வியை கேட்டு திணைக்கள தலைவர்களைக் குழப்புவதிலேயே கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குறியாக இருந்ததமையைக் காணக் கூடியதாக இருந்தது. (இ)

# முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

விசேட புலனாய்வு அணியினருக்குக்கிடைத்த த்கவலை அடுத்து கடந்த 26ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் 14 தற்கொலைக் குண்டுதாரி பயன்படுத்தும் அங்கிகள் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதில் மூன்று கிலோகிராம் நிறையுடைய ஏழு தற்கொலைத் தாக்குதல் அங்கிக ளும் எட்டுக் கிலோ நிறையுடைய ஒன்றும் நான்கு கிலோ நிறை யுடைய மூன்றும், ஒருகிலோ நிறையுடையது ஒன்றுமாக மொத்தம் 14 தற்கொலைத் தாக்குதல் அங்கிகளும் ஆர்.பி. ஜி. ஒன்று ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, மற்றும் தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்கள் நிமித்தம் யாழ் மற்றும் காங்கேசன் துறைப் பொலிஸ் பிரிவுகளில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 19 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சாராயம் வைத்திருந்த 12 பேருக்கும் சூழல் மாசடையும் விதத்தில் குப்பை கொட்டிய 15 பேருக்கும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 12 பேருக்கும் எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மாடு வெட்டியது, கடத்தியது சம்பந்தமாக ஏழு பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், குடித்து விட்டு பொது இடங்களில் கலகம் விளைவித்ததுடன் மது அருந்திய எட்டுப்பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டதாகவும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த வாரங்களில் பகல் வேளைகளிலும் கொள்ளை மற்றும் களவுச்சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டதனை அடுத்து ஐந்து பொலிஸ் நிலையங்களிலும் உள்ள பொலிஸார் மோட்டார் சைக்கிள்களிலும் பகல் வேளைகளில் ரோந்து சென்று வருகின்றனர்.

இதனை அடுத்து பகல் வேளைகளில் நடைபெறும் குற்றச்செயல்கள் குறைந்திருப்பதாகவும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் 23,659 பேர் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் 6 ஆயிரத்து 659 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 499 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 610 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 124 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 510 பேரும், புகுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 711 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 262 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மாந்தை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 678 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 155 பேரும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 872 குடும்பங்களைச் சேர்ந்த 3122 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# காசோலை மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மற்றும் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த வாரம் ஆறு காசோலை மோசடிச்சம்பவங்கள் ப்திவாகியிருப்பதாக .யாழ் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தக் காசோலை மோசடிச் சம்பவங்களில் யாழ். பொலிஸ் பிரிவில் இருந்து ஐந்து முறைப்பாடுகளும் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றிருந்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

வியாபார நோக்கத்திற்காக காசோலையை வரைந்து கொடுத்து விட்டு அதற்குரிய பணத்தை வங்கியில் வைப்புச் செய்யாமல் மோசடி செய்த சம்பவங்களே இவற்றில் அதிகம் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இதில் ஒரு காசோலை மோசடியில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 993 ரூபாவும், மற்யதில் மூன்று இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், மேலும் ஒரு இலட்சம் ரூபா, ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபா, ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா என மோசடிகள் நடைபெற்றுள்ளன.

அத்துடன் காங்சேன்துறை பொலிஸ் பிரிவில் கடந்த 29 ஆம் திகதி ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா காசோலை மோசடிச்சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மோசடிச்சம்பவங்கள் உள்ளூரில் வசிக்கும் நபர்களால் உள்ளூரிலேயே வழங்கப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (பா)

# அதிக பயணிகளுடன் சென்ற 38 வாகன சாரதிகள்மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரத்தில் கூடுதலானபயணிகளை ஏற்றிச் சென்ற பயணிகள் வாகனங்களுக்கு எதிராக 38 வழக்குகள் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டிருப்பதாக யாழ் பிரதிப்பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த பயணிகள் வாகனங்கள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். நகரில் இருந்து புறப்படும் மற்றும் ஏனைய இடங்களில் இருந்து வரும் தனியார் பயணிகள் வாகனங்களில் அளவுக்கதிகமாக பயணிகள் ஏற்றப்படுவதன் காரணமாக பயணிகள் மிகுந்த சிரமங்களையும் எதிர்நோக்கி வருவதாக பல தரப்பில் இருந்தும் சுட்டிக்காட்டப்பட்டதனை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு கூடுதலான பயணிகள் ஏற்றப்படுவதன் காரணமாக பாலியல் தொந்தரவுகள் மற்றும் தகாத வார்த்தைப் பிரயோகங்கள், முரண்பாடுகள் ஏற்ப்டுவதாகவும் இதன் போது பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## English Language

ஆசிரியர் : T.மயூரன்

**TEST 1**

**Underline the correct word given in brackets to make the following paragraph meaningful**

Knitting lece is a (1) (fascinate / fascinating / fascinated) Process. Most people in the (2) (South / Southern) part of Sri Lanka (3) (good / better / well) at making different types of laces using cotton thread. Many families in the South do this as a way of (4) (Life / live / living) Knitting lace is (5) (complete / completed / cpmpletely) done by hand.

**TEST 2**

**Match the utterances under (A) with suitable functions under (B) . Write the relevant number in the box.**

**(A) Utterances**

1) Man will be hunting for another planet to survive.

2) We are going on a picnic next Sunday.

3) The train leaves the station at half past nine.

4) I'll definitely come to your birthday party.

5) Let me carry the bags for you.

**(B) Functions**

a) Predicting something ☐

b) Informing a scheduled event ☐

c) Offering help ☐

d) Promising ☐

e) Talking about a future arrangement ☐

**Write five sentences about the picture**



1) ..........

2) ..........

3) ..........

4) ..........

5) ..........

**TEST 4**

**Read the following dialogue and answer the questions that follow.**

Maurice : My sister is coming to London for a week

Monika : Oh, that will be nice.

Maurice : Yes, but unfortunately, I can't put up with her and hotels are so expensive.

Monika : Perhaps she can stay with us. We've got a spare room in our flat.

Maurice : Oh, that's fine. Thanks Monika.

Monika : Who else will come with Stella?

Maurice : Her hubby, sometimes.

1) Who is Stella? ..........

2) Where does Monika live? ..........

3) How long will Mourice's sister stay in London? ..........

4) Will Stella put up with her brother? ..........

5) Is Stella married? ..........

**TEST 5**

**Complete the following dialogue using the options given in the box.**

Mother : What shall I make you when you come for tea (1) .......... What about chocolate cake?

Saman : Oh, yes mum. (2) ..........

Mother : How many friends will join you ?

Saman : (3) ..........

Mother : I'll make (4) ..........

Saman : Thanks, mum. (5) .......... your ginger flovoured ted.

**Don't forger / It's my favourite too / some pastries as well / with your friends / well..... seven or eight**

**TEST 6**

**Write Paragraph on one of the following. Use about 50 words**

(a) A visit to the zoo

(b) My favourite book

..........

..........

..........

**TEST 7**

**Number the following sentences in the right order to form a text which describes an incident.**

**A Penguin Joke**

☐ The next morning, the policeman was walking down the same street when he saw the couple again with the penguin.

☐ One day, a man and his wife were walking down the street when they came across a penguin

☐ 'Mmm,' said the policeman. 'I think the best thing is to take it to the zoo'.

☐ 'Oh!' exclaimed the man. 'What a surprise! What shall we do with it?

☐ 'Well, we did, said the man. We took it to the zoo and we all had a really good time'

☐ 'What a good idea!' said the woman. 'We' ll go there straight away'.

☐ 'I know', said his wife. 'We' ll ask a policeman'.

☐ So this afternoon we're taking it to the Cinema, and this evening we're going to have a meal in a fish restaurant.

☐ So, they found a policeman and explained what had happened.

☐ 'I thought, I told you to take that penguin to the zoo', the policeman said.

**TEST 8**

**You received the following note from your friend. Write a reply giving only the relevant information use about 50 words.**

Hai Premila,

Our friends have planned to go to the Planetarium next Saturday. Are you coming with us? Why didn't you come to school last week? Is your mother ok now? Hope you'd join us. Please let me know.

with love
Asha.

........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................

**TEST 9**

**The following extract contains 10 mistakes which are underlined. Write each correct word in the box provided. First one is done for you.**

Once upon a time, a long time ago, (1) their (there) was a knight, who as he (2) grow [ ] older lost all his (3) hairs [ ] He (4) become [ ] as bald as (5) a [ ] agg. He (6) don't [ ] want any one to see his bald head. So he (7) buy. [ ] a beautiful, black (8) curl [ ] wig.

**TEST 10**

**Complete the following dialogue using the options given below.**

Mary: Our course will be over in two weeks.
When shall we have (1) ........................................................?

Roy : How about, Thursday the 27th?

Mary : (2) ...................................................................... for some of us.

Roy : That's true, we'll have it on (3) ....................................................

Mary : That's fine. That day (4) ..........................................................

Roy : Yes, but we should ask Sara first. We can't have the party (5) ...............

a) without her

b) No, that's too late.

c) Wednesday the 26th

d) would suit every body.

e) the farewell party.

**TEST 11**

**The following are five students expressing how they help their parents during school vacations. Write their expressions in reported speech. The first one is done for you.**



Priya

I help my mother in cooking.

1) Priya says that she helps her mother in cooking

2) ...............................

3) ...............................



Shanthi

I keep the house clean.



Gamini

I help my father in his garage.

4) ..................

I wash all my clothes my self.



Nelum

5) ..................

I make tea for all, in the morning.



Fathima

6) ..................

I do shopping for my family.



Kumar

**TEST 12**

**Following is a fax massage received by a leading restaurant. Some phrases are deleted. Find them in the box and wirte them in the spaces.**

To : Ever Rest, From : Laura Jonathen.

Message :

I' d like to reserve (1) ................................ We are arriving there (2) ......................... We hope to spend (3) .............................. My daughters and I would preferably like a (4) ........................................ Is it possible to have (5) ........................................? I would grateful to you could tell me the price of each room.

Laura.

**rooms with a sea view / rooms at you hotel / ten days in your hotel / on 17th August / double bedroom with a balcony.**

**TEST 13**

**Fill in the blanks using the words given in brakets to make a meaningful paragraph. First one is done for you.**

Dolphins do have fairly (1) larger brains. There are many stories, ancient and (2) .................................. about dolphins saving sailors from (3) .............................. Ever since the film (4) .............................. we have all seen how clever they are at learning how to do (5) ..................................... However the truth is that dolphins are no more intelligent than (6) .................................. which can also be (7) ........................................ to do tricks. The story about rescuing (8) ................................ are true, but they automatically rescue anything which is about the same size as themselves.

**Flipper / drowning / rats/ tricks/ trained / people/ modern**


**TEST 14**

**You have joined a new school after your O/L examination. Write a letter to your best friend giving details about your new school. Use not more than 150 words.**

Include the following:- name of the school
- discription of the school
- your new friends
- details about subjects and teachers.

........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................

# பாகிஸ்தான் விவகாரத்தில் இந்தியா தலையிடாது





இந்தியாவில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு அனுமதி அளித்ததன் மூலம், மும்பை தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து பின்வாங்கவில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, குர்கானில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறுகையில்.

பாகிஸ்தானுடனான நல்லுறவை வளர்ப்பதற்காக, இந்திய மண்ணில் விளையாட பாகிஸ்தான் அணிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் மும்பை தாக்குதல் பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து மத்திய அரசு பின்வாங்கி விட்டதாகக் கூறப்படுவது தவறானது. ஒருபோதும் நமது நிலையிலிருந்து பின்வாங்க மாட்டோம். இந்த முடிவு நிரந்தரமானது அல்ல. இதை மறுபரிசீலனை செய்யலாம். எதிர்காலத்தில் வேண்டுமானால் மீண்டும் பாகிஸ்தான் அணிக்கு தடை விதிக்கப்படும்.

இதுபோன்ற நல்லெண்ண நடவடிக்கை மூலம், மும்பை தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம். இதுதொடர்பாக அந்நாட்டு அரசு அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்றார் குர்ஷித்.




# கரும்பு விவசாயிகள் இன்று நாடாளுமன்ற முற்றுகை



சர்க்கரை மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த வலியுறுத்தி, இன்று கரும்பு விவசாயிகள் நடத்தவுள்ள நாடாளுமன்றம் முற்றுகையிடும் போராட்டத்தில் தானும் பங்கேற்க உள்ளதாக முன்னாள் இராணுவ தளபதி வி.கே.சிங், தெரிவித்துள்ளார்.


சர்க்கரைக்கான விலை நிர்ணயம், கரும்பு சாகுபடி இட ஒதுக்கீடு போன்றவற்றை கைவிடும்படி, மத்திய அரசுக்கு ரங்கராஜன் குழு பரிந்துரை செய்திருந்தது. இதனை ஏற்றுக் கொண்டால், வட மாநில கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவர். எனவே ரங்கராஜன் குழு பரிந்துரையை நிராகரிக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ராஷ்ட்ரிய கிசான் மஸ்தூர் சங்கத்தின் அமைப்பினரும் • முன்னாள் இராணுவ தளபதி வி.கே.சிங்கும் கடிதம் எழுதியிருந்தனர். பரிந்துரையை நிராகரிக்காவிடில், இன்று கரும்பு விவசாயிகள் நாடாளுமன்றத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபடுவர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# இமாச்சலப் பிரதேசத்தில் இன்று வாக்குப்பதிவு


(சிம்லா)

இமாச்சல பிரதேச சட்டமன்றத்துக்கு இன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதை முன்னிட்டு மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குஜராத் மாநிலத்துடன் இமாச்சல பிரதேச சட்டமன்றத்துக்கு கடந்த மாதம் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. குஜராத்தில் டிசம்பர் மாதம் 13 மற்றும் 17ஆம் திகதிகளில் இரண்டு கட்டமாகவும், இமாச்சலுக்கு இன்று ஒரே கட்டமாகவும் தேர்தல் நடைபெறுகிறது. இமாச்சலில் உள்ள மொத்தம் 68 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 459 பேர் களத்தில் உள்ளனர். இந்த மாநிலத்தில் ஆளும் பா.ஜ.வுக்கும், முக்கிய எதிர்கட்சியான காங்கிரஸுக்கும் இடையே கடும் போட்டி உள்ளது.

இரண்டு கட்சிகளுக்கும் சமமான வெற்றி வாய்ப்பு இருப்பதாக கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் கூட்டணியில் இருந்த தேசியவாத காங்கிரஸ் இந்த மாநிலத்தில் தனித்துப் போட்டியிடுகிறது. முன்பு கூட்டணியில் இருந்த திரிணாமுல் காங்கிரஸ் அனைத்து தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. மாயாவதி கட்சி 66 இடங்களில் தனித்து போட்டியிடுகிறது. இந்த மாநிலத்தில் மொத்தம் 46 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இன்றைய வாக்குப்பதிவுக்காக மொதம் 7253 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிப்பதற்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



# இந்தியாவின் கிராமங்களுக்கு அதிவேக இணையதள இணைப்பு



இந்தியாவின் முதுகெலும்பு என அழைக்கப்படும் 2.5 இலட்சம் கிராமங்களுக்கு அடுத்த 18 மாதங்களில் அதிவேக இணையதள இணைப்புகள் வழங்கப்படு மென மத்திய அரசு தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக பிரதமரின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் சாம்பிட்ரோடா, தெரிவிக்கையில்.

இந்தியா முழுவதும் 2.5 இலட்சம் கிராமங்களை இணைக் கும் வகையில் அடுத்த 18 மாதங்களில் அதிவேக இணை யதள இணைப்புகள் வழங்கப்பட உள்ளதன் மூலம் குழந்தைகளுக்கு தொலைக்காட்சி, தொலைபேசி, கணனி வாயிலாக தகவல் தொழில் நுட்பத்தினை எளிமையாக்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பலகட்ட கருத்தரங்கங்கள் நடத்தப்பட உள்ளன என்றார்.

# மீண்டும் ஒரு கொலைவெறி?



மனைவி ஐஸ்வர்யா இயக்கிய, படத்தில் நாயகனாக நடித்த தனுஷ், அந்த படத்தில் அனிருத் இசையில், "ஒய் திஸ் கொலைவெறி" என்றொரு பாடலை எழுதியதோடு, பின்னணியும் பாடியிருந்தார். அப்பாடல் மிகப் பிரபலமாகி, தனுஷ், அனிருத் இருவரையும் பெரிய அளவில் பேச வைத்தது. இந்நிலையில், தன் தயாரிப்பில், வெளியாகவுள்ள மற்றொரு படத்துக்காகவும், தற்போது இரண்டு பாடல்களை எழுதியுள்ளார் தனுஷ். இப்படத்திலும், அவர் பின்னணி பாடுகிறாரா என்று கேட்டால், இப்போதைக்கு சஸ்பென்ஸ் என்று சொல்லும், கொலைவெறி இசையமைப்பாளர் அனிருத், இந்த பாடல்களையும், கொலைவெறி பாடல் அளவுக்கு பிரபலம் பண்ணுவதற்காக முயற்சி எடுத்து வருகிறோம் என்றார்.

# மாணவர்களுக்கு புரியாணி

தமிழகத்தில் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1982ம் ஆண்டு சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் கடந்து வந்துள்ள நிலையில் தற்போது முதல்வர் ஜெயலலிதா அதில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளார்.

அதன் படி 13 வகையான உணவு வகைகளை கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தர விட்டுள்ளார்.

இதன்படி, காய்கறி பிரியாணியுடன் மிளகுத்தூள் முட்டை, கொண்டைக்கடலை புலவு மற்றும் தக்காளி முட்டை மசாலா, தக்காளி சாதத்துடன் மிளகுத்தூள் முட்டை, சாம்பார் சாதத்துடன் முட்டை, கறிவேப்பிலை சாதம், கீரை சாதம் இதனுடன் மிளகாய் பொடியில் வறுத்த உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட புதிய உணவு வகைத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலில் ஒரு வட்டாரத்தில் மட்டும் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு அந்த வட்டாரத்தில் இந்தப் புதிய உணவு முறை திட்டத்தின் செயற்பாடு குறித்து அறிந்த பின்னர், மற்ற வட்டாரங்களுக்கு விரிவு படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தொலைபேசி கோபுர கதிர்வீச்சு; பொதுநல மனு தள்ளுபடி

தொலைபேசி கோபுரங்களிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சுகளை கண்காணிக்க தனியாக ஒரு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற பொது நல மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

புதுடில்லியைச் சேர்ந்த தன்னார்வ அமைப்பு ஒன்று, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொதுநல மனுவில், மக்கள் தொகை அதிகமுள்ள இடங்களில் தொலைபேசிக் கோபுரங்கள் அமைப்பதை தடை செய்ய வேண்டும்.

இந்த கோபுரங்களிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன் பறவை இனங்களும் அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பொது மக்களுக்கும் பல்வேறு விதமான உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்டு வருகின்றன. மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் தொலைபேசி கோபுரங்களை அமைக்க சில மாநில அரசுகள் தடை விதித்துள்ளன.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் தான் தொலைபேசி கோபுரங்களிலிருந்து அதிகப்படியான கதிர்வீச்சு வெளியேற்றப் படுகிறது.

இதனால் புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன. எனவே தொலை பேசி கோபுரங்களிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சை கண்காணிக்க தனி அமைப்பை ஏற்படுத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இத தொடர்பாக தீதிபதிகள் தெரிவிக்கையில் மொபைல் போன் கோபுரங்களிலிருந்து அதிகப்படியான கதிர்வீச்சு வெளியேற்றப்படுவதைக் கண்காணிக்க தனி அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இப்போதைக்கு ஏற்க முடியாது.

இதை நிறைவேற்ற தொலை தொடர்புத் துறையின் அறிவுறுத்தல்கள் தேவைப்படுகின்றன.

# ஜப்பான் கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைந்தது சீனா




ஜப்பான் கடல் எல்லைக்குள் சீனாவின் கப்பல்கள் மீண்டும் அத்துமீறி நுழைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளன.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சென்காகு தீவுகளுக்கு ஜப்பானும், சீனாவும் உரிமை கொண்டாடி வருகின்றமை தெரிந்ததே.

இந்நிலையில் சென்காகு தீவு கடல் பகுதியில் சீனாவின் கடலோர கண்காணிப்பு படைக்குச் சொந்தமான நான்கு கப்பல்கள் நேற்று முன்தினம் அத்துமீறி நுழைந்துள்ளன. இவ்வாறு அவரகள் நுழைகையில் ஜப்பான் கடற்படை அதிகாரிகள் அவர்களைக்கடுமையாக எச்சரித்தனர்.

ஆனால் தங்கள் கடல் பகுதி எல்லையில் தான் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளதாக சீனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே கப்பல்கள் ஏற்கனவே கடந்த மாதம் 30ஆம் திகதி இதுபோன்று அத்துமீறி நுழைந்தது குறிப்பிடத்தக்கது.



சீனா சமீபகாலமாக தனது இராணுவத்தில் அதிநவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி வருகிறது.

ஏற்கனவே ஜெ-20 என்ற ரக ஜெட் போர் விமானத்தை ஏராளமாகத் தயாரித்து வைத்துள்ளது சீனா.

தற்போது ஜெ-31 என்ற புதிய நவீன போர் விமானத்தை தயாரித்து உள்ளது. இதன் வெள்ளோட்டம் வடகிழக்கு பகுதி மாகாணமான லியான்னிங் பகுதியில் நடந்ததாக ஆசிய பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதன் மூலம் சீனா இராணுவ பலத்தில் உயரிடத்தைப் பெற்றிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தபாலில் வந்தன மலைப்பாம்புகள்; ஊழியர்கள் அலறியடித்து ஓட்டம்

தென்ஆபிரிக்காவில் பொதியில் அனுப்பப்பட்ட மலைப் பாம்பை கண்டு, தபால் ஊழியர்கள் அலறியடித்து ஓடியுள்ளனர்.

தென் ஆபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் அருகே சபி நகரம் அமைந்துள்ளது. இங்குள்ள தபால் அலுவலகத்திற்கு வந்த பொதிகளை, ஊழியர்கள் தனித்தனியாக பிரித்து கொண்டிருந்தபோது, பொதிகளுக்கு நடுவே வெள்ளை மலைப்பாம்பு ஒன்று ஊர்ந்து கொண்டிருந்தது. இதைக் கண்டு, ஊழியர்கள் அனைவரும் அலறியடித்து கொண்டு வெளியே ஓடினர்.

அதன் பின், வனத் துறையினர் உதவியுடன் ஒரு மலைப் பாம்பு பிடிக்கப்பட்டது. மேலும் மூன்று மலைப்பாம்புகள், பொதியில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன.மலைப்பாம்பை உரிய முறையில் பெறாமல், தபால் பொதியில் அனுப்பி, பெற்று கொள்ள முயன்றவரை பொலிஸார் கைது செய்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.வெள்ளை மலைப்பாம்பு விஷமற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம்களை இழிவுபடுத்தியதாலேயே "சான்டி" புயல் அமெரிக்காவைத் தாக்கியது

## – முஸ்லிம் மதத் தலைவர்கள்

முகமது நபியை இழிவுபடுத்தி திரைப்படம் எடுத்த காரணத்தினால் தான், அமெரிக்காவை சான்டி புயல் தாக்கியதாக முஸ்லிம் தலைவர்கள் டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

எகிப்தை சேர்ந்த மத தலைவர் வாக்தி கொனீமின் டுவீட் தெரிவிக்கையில் அமெரிக்காவை ஏன் புயல் தாக்கியது என்று சிலர் வியக்கின்றனர். நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தியதால் தான் இறைவன் பழி வாங்கினான் என்பதே எனது கருத்து எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சவுதி அரேபியாவைச் சேர்ந்த மத குரு சல்மான் அல் அவ்தா கூறுகையில், இஸ்லாத்தை தழுவ இது தான் நேரம் என்பதை அமெரிக்கர்களுக்கு நினைவுபடுத்தவே சான்டி புயல் வந்தது என்று தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் அமெரிக்காவைத் தாக்கிய சான்டி புயலில் சிக்கி பலியானவர்களில் முஸ்லிம்களும் அடக்கம் என பல முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.அடுத்தவர்களின் கஷ்டத்தை இழப்புக்களைப் பார்த்து சந்தோஷப்படக் கூடாது என்றும் பலர் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்


# பேருந்து மீது துப்பாக்கிச்சூடு பாகிஸ்தானில் 18 பேர் பலி



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குஸ்தார் பகுதியில் பெற்றோல் நிரப்பும் இடம் ஒன்றில் நின்று கொண்டிருந்த பஸ் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில் 18 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது, துப்பாக்கியால் சுடப்பட்டவர்களை விட, தீயினால் கொல்லப்பட்டவர்களே அதிகம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இறந்தவர்களில் பெண்கள், குழந்தைகளும் அடங்குவர் எனவும், இறந்தவர்களின் அடையாளம் இதுவரை கண்டறியபடவில்லை.

துப்பாக்கியுடன் வந்த நபர் பேருந்தை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டுள்ளான். அப்போது சில தோட்டாக்கள் அங்கிருந்த பெட்ரோல் பீப்பாய்கள் மீது பட்டதால், அவை வெடித்து தீப்பிடித்தது. இந்த தீ அருகிலிருந்த பொருள்கள் மீது வேகமாகப் பரவியதால், பேருந்து தீப்பிடித்து எரிந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதன் போது அதிகமான கடைகளும் இந்தத் தாக்குதலில் சேதம் அடைந்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மியான்மர் இனக்கலவரத்தில் சூகி தலையிடவேண்டும்




மியான்மர் நாட்டு மக்கள் சந்தித்து வரும் இனக் கலவரம் குறித்து கவலை தெரிவித்துள்ள புத்தமத தலைவர் தலாய லாமா, அந்நாட்டு எதிர்க் கட்சித் தலைவரான சூகியிற்கு இது பற்றி இருமுறை கடிதம் எழுதியுள்ளார். இப்பிரச்சினையில் ஒரு தீர்வை ஏற்படுத்தும்படி தனது கடிதத்தின் மூலம் அவர் கோரியிருக்கிறார்.

இதுபற்றி மியான்மர் அரசின் செய்தி அலுவலர் லோப்சங் சோதக் கூறுகையில் தீவிர மனித உரிமைகள் விவகாரமான இப்பிரச்சினையில் தனது கருத்தைக் கூறுவதற்காக டில்லியில் உள்ள மியான்மர் தூதரகத்தில் சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யும்படி, தலாய் லாமாவின் பிரதிநிதிகள் கோரியிருந்தனர் எனக் கூறினார்.

இதுபோன்ற மனித உரிமைகள் மீறல் பிரச்சினை தொடர்பாக தலாய் லாமா கவலை தெரிவித்திருப்பது இது முதல்முறையல்ல. என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 மடங்கு பெரிய தாஜ்மகால் துபாயில் உருவாக்கத் திட்டம்



உத்தர பிரதேச மாநிலத்தின் ஆக்ராவில் உள்ள தாஜ்மகால் போன்ற வடிவத்தில் துபாயில் பிரமாண்ட கட்டடம் உருவாக்கப்பட உள்ளது.முகலாய மன்னர் ஷாஜகான், தன் மனைவியின் நினைவாக, ஆக்ராவில் தாஜ்மகாலைக் கட்டினார். உலகப் புகழ் பெற்ற இந்த கட்டடத்தின் வடிவத்தில், துபாயில் 10 இலட்சம் சதுர அடியில் புதிய கட்டடம் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது.

பிரபல லிங்க் குளோபல் கட்டுமான நிறுவனம் 5,500 கோடி ரூபா மதிப்பில் இந்தக் கட்டடத்தை, 2014ஆம் ஆண்டு கட்ட உள்ளது. தாஜ்மகால் வடிவத்தில் அமையும் இந்த கட்டடத்தில், 300 அறைகள் கொண்ட விடுதியும் வணிக வளாகமும் அமைய உள்ளது.கட்டுமான நிறுவனத்தின் பணிப்பாளர் அருண் மெஹ்ரா இது குறித்து குறிப்பிடுகையில், தாஜ்மகாலை விட நான்கு மடங்கு பெரிய அளவில், தாஜ் அரேபியா என்ற கட்டடம் கட்டப்பட உள்ளது. இந்த கட்டடம், ஆக்ராவில் உள்ள நினைவு சின்னத்துக்கு போட்டியாகக் கட்டப்படவில்லை. இந்த கட்டடத்தால், தாஜ் மகாலின் புகழுக்கு எந்த களங்கமும் ஏற்படாது என்று தெரிவித்தார்.


# தம்பதிகள் இணைந்து வாழ்ந்தால் கின்னஸிலும் இடம் பிடிக்கலாம்



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர் கரம்சந்த். இவருக்கும், கதாரி என்பவருக்கும் 1925 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. கரம்சந்த்-கதாரி தம்பதியருக்கு 8 குழந்தைகள் பிறந்தன. அவர்கள் மூலம் இத்தம்பதிக்கு 28 பேரன், பேத்திகள் உள்ளனர். பஞ்சாபில் இருந்து லண்டனுக்கு குடிபெயர்ந்த இத்தம்பதிகள் கடந்த 87 ஆண்டுகளாக கணவன்- மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள். இதன்மூலம் உலகில் நீண்ட நாட்களாக சேர்ந்து வாழும் தம்பதி என்ற புதிய சாதனையை கரம்சந்த்- கதாரி தம்பதியினர் படைத்துள்ளனர்.

அவர்களது இந்த சாதனை விரைவில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற உள்ளது. கரம்சந்துக்கு தற்போது 107 வயதாகிறது. அவரது மனைவி கதாரிக்கு 100 வயதாகிறது. உலகின் நீண்டநாள் தம்பதியரான இவர்கள் பற்றி லண்டனில் உள்ள பத்திரிகைகள் சிறப்பு செய்திகள் வெளியிட்டுள்ளன.அவர்கள் தங்கள் வாழ்க்கை வெற்றி பற்றி கூறுகையில், நாங்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமாக இருக்கிறோம். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் ஏற்பட்டதே இல்லை. எப்போதும் மகிழ்ச்சியாக இருப்போம். அதனால் தான் இவ்வளவு நாட்கள் சேர்ந்து வாழ முடிந்துள்ளது என்று கூறியுள்ளனர்.

# அச்சுவேலி தோலகட்டி நெல்லிரச தயாரிப்பு மின்னியல் இயந்திர சாதனம் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோலகட்டி நெல்லிரசத் தயாரிப்புக்கென மின்னியல் இயந்திர சாதனத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அலுவலகத்திற்கு முன்பாக மேற்படி சாதனத்தை நேற்றைய தினம் அமைச்சர் வழங்கி வைத்தார்.

அச்சுவேலியில் அமைந்துள்ள தோலகட்டி நெல்லிரசம் தயாரிக்கும் சிறுகைத்தொழில் நிலையத்தினர் அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இச்சாதனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நெல்லிக்காய்களை தேவைக்கேற்ப அரைப்பதில் மின்னியல் இயந்திரசாதனமொன்று இல்லாத நிலையில் கைகளால் இடித்தே அவற்றின் சாற்றை எடுக்க வேண்டிய நிலை இருந்து வந்தது.

இந்நிலையிலேயே தொழில் ஸ்தாபனத்தினர் அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய புதிதாக இயந்திரசாதனம் கொள்வனவு செய்யப்பட்டு அருட்சகோதரி எலிசபெத்திடம் வழங்கி வைக்கப்பட்டது.

மின்னியல் இயந்திரசாதனத்தைப் பெற்றுக் கொண்ட அருட்சகோதரிகள் அமைச்சருக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உடனிருந்தார்.

# புளியங்கண்டு பிள்ளையாரின் வாகனங்கள் மாயமாகின

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள புளியங்கண்டுப் பிள்ளையார் கோவிலில் இருந்து இரண்டு சுவாமி வாகனங்கள் களவு போயிருப்பதாக ஆலய பரிபாலன சபையினரால் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இரவு வேளை அந்தக் கோவிலுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த குதிரை மற்றும் இடப வாகனங்கள் இரண்டையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொலிஸாரின் ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தக் களவு குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# சட்டவிரோத மரக்குற்றிகளுடன் ஏழு சந்தேகநபர்கள் கைது

(மாங்குளம்)

மாங்குளம் பொலிஸ் பிரிவில் கல்விளான் பகுதியில் சட்டவிரோதமாக மரக்குற்றிகளுடன் 7 சந்தேகநபர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தக் காலப்பகுதியில் தம்பனகுளம் பகுதியில் காட்டு மரங்களை வெட்டி அரியப்பட்டிருந்த 28 முதிரைப் பலகைகளும் மரம் வெட்டும் கருவி ஒன்றும் ஒரு முதிரைக் குற்றியும் பொலிஸாரினால் மீட்கப்பட்டதாகவும் கூறிய பிரதிப் பொலிஸ் மா அதிபர், இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் அங்கிருந்து ஓடித் தப்பித்துக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதனை விட மேலும் சில மரக்கடத்தல் சம்பவங்களும் பதிவாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

# மன்னாரில் 2720 குடும்பம் கடும் மழையால் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக 2,720 குடும்பங்களைச் சேர்ந்த 9,030 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகமட் றியாஸ் தெரிவித்தார்.

இதேநேரம் 10 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. அதில் 5 வீடுகள் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவிலும் ஏனைய 5 வீடுகள் மடு உதவி அரச அதிபர் பிரிவிலும் முழுமையாக பாதிப்படைந்துள்ளன.

43 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அதில் 36 வீடுகள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலும், ஏனைய 7 வீடுகளும் மடு உதவி அரச அதிபர் பிரிவிலும் உள்ளடங்குவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பாதிப்புக்கள் குறித்து ஒவ்வொரு பிரதேச செயலகமும் தகவல்களை திரட்டி வருகின்றதாகவும் தேவைப்படின் உடனடியாக நிவாரணங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சிரமங்களை...

தற்காலிக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்களே அதிகளவு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்ட சிலர் மிக நீண்ட காலமாக இடைத்தங்கல் முகாம்களில் தொடர்ச்சியாக தங்க நேரிட்டுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மழை காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்நோக்க நேரிடும் என ஐக்கிய நாடுகள் மனிதாபிமான இணைப்பு நிறுவனத்தின் வடக்கு இணைப்பாளர் பொன்டினி ரன்டிசியோ தெரிவித்துள்ளார் என அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

## சர்வசன...

பெறவேண்டிய தேவையும் எழலாம். நாம் அதற்கும் தயாராகவுள்ளோம். நாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து இந்தச் சட்ட மூலத்தை உரிய முறையில் சட்டமாக்குவோம்.

வீட்டுத்துறை பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்து நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம் மூலம் மக்களை வறுமையிலிருந்து மீட்பதே திவிநெகும இயக்கத்தின் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை நிர்வாக சேவை பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட விசேட பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை மாலையில் இணையத்தளம் மூலம் இந்தப் பரீட்சை முடிவுகளை பார்வையிடக்கூடியதாக இருந்ததாகத் தெரியவருகிறது.

இந்த வருடம் நடைபெற்ற இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து 43 எஸ்.எல்.ஏ.எஸ் பதவியணியினர் தொடர் பயிற்சியின் பின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் நியமிக்கப்படவுள்ளனர்.

பெரும்பாலும் இவர்கள் அனைவரும் தமிழ் மொழி மூலமாக பரீட்சை எழுதி நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் பரீட்சார்த்திகள் மட்டும் தோற்றியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் வட, கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைககப்பட்டவர்களுள் ஏறக்குறைய 50 வீதமானவர்களே நியமனத்திற்காக தேர்வுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (23)

## சிங்கள மக்களின்...

செயற்பாடுகள் வரவேற்கத்தக்கது. குறிப்பாக இன்று தென்னிலங்கையிலிருந்து வருகை தந்துள்ள சிங்கள சகோதரர்கள் இங்குள்ள மக்களோடு பரஸ்பரம் கருத்து பரிமாற்றங்களில் ஈடுபடுவதன் ஊடாக இனங்களுக்கிடையே சுமுகமான நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

மேலும் இவ்வாறான வாய்ப்புக்களை அபிவிருத்தியின் ஊடாகவுமே மேற்கொள்ள முடியும் அபிவிருத்தி என்பது எங்கள் மக்களுடைய வாழ்வில் முக்கியமானது. முன்னேற்றம் இல்லையென்றால் நாம் வாழ்வில் மீள முடியாது எமக்கான ஒரு வளமான வாழ்வு அவசியமானது ஆனால் சிலர் எமது மக்களின் வளமான வாழ்வை முடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றனர் இது தமிழ் மக்களை நிம்மதியான வாழ்வுக்கு இட்டுச்செல்லாது எனவும் தெரிவித்தார்.

## ஈழத்தமிழருக்கான...

பொதுச் செயலாளர் ஸ்டாலினிடமும், டி.ஆர்.பாலுவிடமும் நேரடியாக கேட்டு தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். இந்த முன்னேற்றம் ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தையும், அரசியல் எதிர் காலத்தையும் ஒளிமயமாக ஆக்குவதற்கு பயன்படும் என்ற நம்பிக்கையை பெற்றுள்ளோம்.

நாங்கள் கொடுத்த ஆவணத்தோடு இலங்கையில் நடந்த கொடூர காட்சிகளையும் சி.டி.யாக தயாரித்து இணைத்துள்ளோம். தி.மு.க. இலங்கை தமிழர்களுக்காக ஐ.நா. மன்றத்தை அணுகுவது இது முதல் முறை அல்ல. ஏற்கனவே 1961 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் இலங்கை தமிழர் பாதுகாப்பு பற்றி தீர்மானம் நிறைவேற்றி ஐ.நா. சபை தலையிட்டு தமிழர்களை பாதுகாக்க கோரிக்கை வைத்தோம். 1985 ஆம் ஆண்டு 1 கோடி கையெழுத்துப் பெற்று அனுப்பி வைத்தோம். இப்போது பல்வேறு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று தமிழர்கள் கண்ணீரும் செந்நீரும் வடிக்கும் நிலை உள்ளது.

இனி மேலாவது ஈழத்தமிழர்களுக்கு விடிவு காலம் ஏற்பட வேண்டும். அதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்கான முயற்சியை ஐ.நா. சபை எடுக்க வேண்டும். தேவையான ஒத்துழைப்பை இந்திய அரசும் வழங்க வேண்டும். இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பொது வாக்கெடுப்பு நடத்த வலியுறுத்தியுள்ளோம். அதை செயற்படுத்த இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

## இறுதிக்...

எப்படி நிகழ்ந்தன என்று விளக்கமளிக்கப்படுவதே ஆகும்.

ஆனால் அது இன்னமும் நடந்துவிடவில்லை. இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில், ஐ.நா.வின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்தன என்பது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள சாள்ஸ் பெற்றியின் அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம். நானும் நிபுணர் குழுவின் இரு உறுப்பினர்களும் இந்த அறிக்கையை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என்றும் மர்சுகி தருஸ்மன் மேலும் கூறியுள்ளார்.

## கைபேசி...

அமுல்படுத்தியுள்ளது.

அதாவது நோயாளிகளை இவ்வாறு கொண்டுசெல்லும் போது தொலைபேசி உரையாடலைத் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது சம்பந்தமான அறிவுறுத்தல் வைத்தியசாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (பா)

# மனித உரிமை ஆணைக்குழு சட்டத்தில் வருகிறது திருத்தம்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரங்களை மேலும் பலப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தத் தவறும் அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரக் கூடிய வகையில் இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பரிந்துரைகளை அமுல்படுத்தல் தொடர்பில் தற்போதைய சட்டத்தில் போதியளவு அதிகாரங்கள் கிடையாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் நீதவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார். அரசாங்க ஊழியர் ஒருவர் பரிந்துரைகளை அமுல்படுத்தாவிட்டால் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றிற்கு அறிவிக்கும் உரிமையே தற்போதைய சட்டத்தில் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தச் சட்ட அதிகாரம் போதுமானதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## செல்வம் எம்.பி...

பணத்துக்காக கடத்திச் செல்லப்பட்டு அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை சின்னத்துரை இந்திரேஸ்வரன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை பகுதியில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

சின்னத்துரை இந்திரேஸ்வரன் நகை வியாபாரத்துக்காக 30 இலட்சம் ரூபாவுடன் சந்தேக நபரோடு சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. பணத்தை நோக்கமாகக் கொண்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# தலைமை நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டை வெளியிட வேண்டும்

## சட்டத்தரணிகள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான கண்டனத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென ப்ரீ மார்ச் என்ற சட்டத்தரணிகளின் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தலைமை நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருக்கின்றமை, அந்த விசாரணைகள் தொடர்பில் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தலைமை நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

அந்தக் குற்றச்சாட்டுக்கள் என்ன என்று கேட்கப்பட்ட போதிலும், அதுபற்றி தற்போது தெரியப்படுத்த முடியாது என்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதன்மூலம் அவருக்கு எதிரான விசாரணைகளின் நம்பகத்தன்மையே கேள்விக்குள்ளாகியிருப்பதாக ப்ரீ மார்ச் அமைப்பின் செயலாளர் சட்டத்தரணி பண்டார ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, பதவி நீக்குவதற்கான கண்டனத் தீர்மானத்தை எதிர்நோக்கியுள்ள தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு விசாரணை முடியும் வரையில் வழக்கு விசாரணைகளில் ஈடுபட சட்டத்தில் இடமிருக்கிறதா என்று ஊடகவியலாளர்கள் சட்டத்தரணி பண்டார ஏக்கநாயக்கவிடம் வினவினர்.

அதற்கு பதிலளித்த சட்டத்தரணி பண்டார, வழக்கு விசாரணைகளில் ஈடுபடுவதற்கு தலைமை நீதியரசருக்கு இப்போதைக்கு சட்டரீதியாக பிரச்சனை இல்லை என்று கூறினார்.

முன்னாள் தலைமை நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, அந்த விசாரணைகள் நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலும் அவர் வழக்கு விசார[illegible]களை நடத்தியதை ப்ரீ மா[illegible]மைப்பின் செயலாளர் சுட்[illegible]ட்டினார்.

நாடாளுமன்றத்தில் பதவி நீக்கத் தீர்மானம் தொடர்பான விசாரணைகள் நடக்கும்போது, தலைமை நீதியரசரை நீதிமன்ற வழக்கு விசாரணைகளிலிருந்து ஒதுங்கியிருக்குமாறு தடை உத்தரவு பிறப்பிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு எந்த விதமான அதிகாரங்களும் இல்லை என்றும் அவர் கூறினார்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மோசமான நிதி நெருக்கடியில்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மிக மோசமான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதனால், இலங்கை மின்சாரசபை மற்றும் தனியார் சக்தி வழங்குனர்களுக்கு எரிபொருளைத் தொடர்ந்தும் விநியோகிப்பது தொடர்பாக மீள் பரிசீலனை செய்யவேண்டியுள்ளது. அவ்விரு தரப்பினரும் செலுத்த வேண்டிய நிலுவையை ஏக காலத்தில் செலுத்தாவிடில், நெருக்கடிநிலை மேலும் அதிகரிக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்விரு நிறுவனங்களும் எரிபொருள் கொள்வனவு செய்தமைக்கான கட்டணங்களை கடந்த 10 மாதங்களாக செலுத்தவில்லை. இவ்வாறான நெருக்கடியான நிலைமையிலேயே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆகையினால் இவ்விரு நிறுவனங்களுக்கும் எரிபொருள் விநியோகிப்பது தொடர்பில் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது

எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பது குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எந்தவொரு தீர்மானத்திற்கும் வரவில்லை

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் வீழ்சியடைந்ததனை அடுத்து மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கையில் எரிபொருட்களின் விலை அதிகரிக்காது மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை இறக்குமதி செய்வதற்கு நாடுகள் முன்வருவதில்லை எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# டொலர்களைக் கடத்திய இரண்டு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

மாலைதீவிற்கு சட்டவிரோதமான முறையில் 30 இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களை எடுத்துச்செல்ல முனைந்த இரண்டு பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அமெரிக்க டொலர்களை கடத்திச் செல்ல முற்பட்டவர்கள் பொரளை மற்றும் சிலாபம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் குறித்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டதாக

இச்சம்பவம் தொடர்பாக அவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# 16 வயது தமிழ் மாணவியை காணவில்லை கனடாவில்


கனடா, ஸ்காபரோ நகரில் நீல்சன் வீதி மற்றும் எஸ்மயர் வீதி சந்திப்புக்கருகில் வசிக்கும் 16 வயதுடைய தமிழ் மாணவி ஒருவரைக் காணவில்லையென அறிவித்துள்ள ரொறன்ரோப் பொலிஸ் அவரைக் கண்டு பிடிக்க உதவி கோரியுள்ளது.



காயத்திரி வைத்திலிங்கம் என்ற 16 வயது மாணவியே காணாமற் போனவராவார்.

மண்ணிறக் கண்களும் கறுப்பு நிற அடர்த்தியான தலைமயிருடைய இந்த மாணவியின் பாதுகாப்புத் தொடர்பாக தாங்கள் கரிசனை கொண்[illegible]ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர் 416.222.8477 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது www.222tips.com இணையத்திலோ தகவல்களைத் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

# சபாநாயகரை சந்திப்பதற்கு சட்டத்தரணிகள் சங்கம் முயற்சி



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பிரேரணை தொடர்பில் விவாதிப்பதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில், தற்போதைய நிலைமைகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் சபாநாயகரிடம் விவாதிப்பதான தீர்மானமொன்று எடுக்கப்பட்டதாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரி சபாநாயகருக்கு கடிதம் மூலம் வேண்டுகோளொன்றையும் முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள மேற்படி சங்கம், சபாநாயகருடனான இந்த சந்திப்பு விரைவில் இடம்பெறும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை, சபாநாயகருடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 7 ஆம் திகதி கூட்டப்படவுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது சில தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது


# மலேசிய ஹொட்டேல் முகாமைத்துவ பயிற்சிநெறியில் மாணவர்கள் இணைவு




சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி ஊடாக மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia INVITE திட்டத்தின் வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சிநெறியில் இணைந்த ஒரு தொகுதி மாணவர்கள், கோலாலம்பூர் SEGi University Training Centre இல் 22-10-2012 திங்களன்று தமது கற்கைநெறியை ஆரம்பித்தனர்.

இவர்களை நேரடியாக மலேசியா அழைத்துச்சென்று கற்கைநெறியில் இணைத்த சிகரம் பணிப்பாளர், மாணவர்களுக்கு அங்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பாக மாணவர்களின் பெற்றோருக்கு 29-10-2012 அன்று சிகரம் விரிவுரை மண்டபத்தில் விளக்கமளித்தார்.

2ம் அணி மாணவர்கள்
ஜனவரியில் பயணம்
விண்ணப்ப முடிவுத் திகதி:
நொவெம்பர் 10



MEDIA & EDUCATION

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி

சிகரம் கல்வி தொழில் வழிகாட்டி
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 021 300 80 60 Hotline: 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk


## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 1940 - 07 - 14

உதிர்வு 2011 - 10 - 18



### அமரர் சரநேரிஸ் ஜேமிஸ் (பீற்றர்)

ஓராண்டு போன பின்பும்
ஓயவில்லை நினைவுகள்
மாமராய் நீங்கள் இருந்தும்
வேர் விட்ட நாமெல்லாம்
பாராமல் வாடுகிறோம்
ஒரு முறை பார்த்துவிட
வாருங்கள்.

சின்ன உடையார் வளவு
இமையாணன்
உடுப்பிட்டி.

(இ) குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.